Free Circulation GERMANY , ENGLAND ஆனி. June.2018

# வெற்றிமணி
Vettimaniy

1950 (68)
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை

Tel:0231 162377
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany Fax:0231 147836

## 25 வது அகவையில் தடம் பதிக்கும் உங்கள் வெற்றிமணி

Dr IN



நான்
Made in Jaffna

நவயுகா

வியாபாரம் 2018
28ம் பக்கம்


S.K.Silks & Gold Paraadise
மாபெரும் ராஜமுத்திரை
16 தடம் பதிக்கிறது
யேர்மனி கம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேர்த் திருவிழாவில் எமது
24.06.2017 ஞாயிறு
மாபெரும் அதிரடி மலிவு விற்பனை!
Mr.P.Sritharan.
Proprietor

Tel:0231 9501 647
Adler str 33 - 44137 Dortmund

U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles
T.T.S.Brothers GmbH&Co.KG
Germany
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Page.9

StaR-Impex
Tel:0231 860 26 96
Kipper Str.03
44147 Dortmund/ Germany
S.29

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி



# கம்போடியாவுக்கு இன்றும் வளம் கொடுக்கும் தமிழ்மன்னன்!





ஒரு நாட்டுக்கு செல்வது என்றால் எந்த நாட்டுக்குள்ளால் செல்ல வேண்டும் என்பது 1980 களில் இருந்து எமக்கு அத்துபடி. ஆனால் கம்போடியாவிற்கு எப்படிப்போவது என்பது இப்போ கேட்டு அறியவேண்டியதாகப் போச்சு. ஆம் ஐரோப்பாவில் இருந்து நேரடியாக அங்கு சென்று இறங்க வழியில்லை.

ஓன்றில் பாங்கொக்,அல்லது மலேசியா,சிங்கப்பூர், வியட்நாம் வழியாகவே அங்கு செல்லவேண்டும். வழமையாக விமானம் தரை இறங்கியதும் ஒரு விமான நிலையத்தின் உணர்வு தானாகவே வந்துவிடும். ஆனால் கம்போடியாவில் இறங்கியதும் ஒரு ஆச்சிரமத்துள் விமானம் இறங்கியது போன்ற உணர்வே ஏற்படும். விமான நிலயத்தின் கூரை ஓடுகளால் வேயப்பட்டு கூரான கூரையுடன் அழகா இருந்தது.

கம்போடியா செல்வதற்கு விசா எடுத்தல் வேண்டும். இணையத்திலும் எடுக்கலாம் அல்லது சியாம் ரீப் (Siem Reap) விமான நிலையத்திலும் எடுக்கலாம். 2 பாஸ்போட்படங்களும் ஆளுக்கு 30 டொலரும் கொடுத்தால் விசா உடன் வழங்குவார்கள்.


அது என்ன அமெரிக்கன் டொலர். எந்த நாட்டிலும் அந்த அந்த நாட்டு பணத்திலும் வழங்கலாம் அல்லவா. ஆனால் அங்கு ஒரு இளநீர் வாங்குவதாக இருந்தாலும் அமெரிக்கன் டொலரில்தான் வழங்கவேண்டும். அவர்கள் மீதிக்காசு டொலரில் தருவார்கள். மீதிக்காசு கால் டொலராக இருந்தால் மட்டும் மீதிக்காசை அவர்களது றியால் காசில் தருவார்கள். அது 1000 றியாலாக இருக்கும். அப்படி என்றால் நீங்கள் நான்குபேர் இளநீர் குடித்தால் 16 ஆயிரம் றியால் கொடுக்கவேண்டும். இப்ப புரிகிறதா ஏன் றியால் பெரும் புளக்கத்தில் இல்லாததற்கான காரணம்.

விமான நிலையத்தில் இருந்து நேராக சோமாதேவி கோட்டலுக்கு சென்றோம். போகும் வழியெங்கும் மாமரங்கள் அதுவும் நல்ல கனிகளுடன் இயல்பாக பழுத்து தொங்குகின்றன. சேம்பாட்டு மண்ணும், தெருவும், வெய்யிலும் இதனை எல்லாம் பார்க்கும்போது ஒரு 30 வருடங்களுக்கு முன்பு இருந்த கலப்படம் இல்லாத யாழ்ப்பாணம் போல் இருந்தது.

கோட்டல் வாசலில் இறங்கியதும் முதல் கண்ணில் பட்டது பல கொந்தல் மாங்காய்கள். நிமிர்ந்து மரத்தைப் பார்த்தால் மருந்தடிக்காமல் பழுத்து தொங்கும் மாங்கனிகள். சரி ஒரு கைபார்ப்போம் என்று கோட்டலுள் நுழைந்தால் அங்கும் குலை குலையாக நுங்கும். பலாப்பழமும் அறுத்து வைத்திருக்கிறார்கள்.

இதற்கு மேல் அங்கு அங்கோவாட் ஆலயம் பார்க்கும் எண்ணம் யாருக்கு வரும். இருந்தாலும் அங்கு நிற்கும் ஒரு வாரமும் எதனையும் இழக்கக்கூடாது என்ற எண்ணமே மேலோங்கி நின்றது.

கோட்டலுக்கு வரும்போதே கோட்டல் ரைக்சி (Taxi) சாரதி, சுற்றுலா படங்களைக்காட்டி இந்த ஆலயம் நான்கும் பாரக்க (3 நாட்களுக்கு ஒரு வருக்கு 62 டொலர் என்றான்) அத்தோடு கோட்டலில் சென்று நீங்கள் ரைக்சி பிடித்தால் காசு அதிகம் வரும், என்னையே பிடித்தால் நான் உங்களுக்கு அவர்களைவிட குறைவாக எடுப்பேன் என்றான்.





என்ன விசுவாசம். கோட்டல்காரன் அனுப்பிய ரைக்சிக்காரனே அவனுக்கு வேட்டுவைக்கிறான் என்றால் நான் அவதானமாக இருக்கவேண்டும் என்று முடிவுடன், அந்தச் சாரதியை உடனே இன்னும் இரண்டு மணிநேரத்தில் செல்வோம் என்றேன். சொன்ன நேரத்திற்கு வந்தார். அவர் பெயரர் டென். ஆங்கிலம் பேசுவதை விட உடல் மொழி அபாரமாகக் கற்றிருந்தான்.

அன்று மேதினம். தொழிலாளர் தினத்தில் தனக்கு வந்த முதல் சவாரி நாம் என்று மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சியை யாருடன் பகிர்ந்து கொண்டான் என்பதனைப் பார்க்கும்போது அவன் மீதுள்ள எண்ணம் உயர்வடைந்தது.

ஆம் வருகிறோம் என்றதும், வட்சப்பில் வீடியோ கோல் முலம் தனது பாஷையில் கதைத்தான். பின்பு என்னைக் காட்டினான், மறுபுறத்தில் வயதான தாய் தந்தையர் எனக்கு வணக்கம் சொல்லிக் கும்பிட்டார்கள். தன் மகனுக்கு உதவியதில் அவர்கள் கண்கள் மலர்ந்திருந்தன. இதற்கு மேல் நான் எந்த ஆலயத்தை இங்கு பார்கப் போகிறேன் என எண்ண வைத்தது அவர்களது அன்பு.

மூன்று நாட்கள் ஆலயங்களைச் சுற்றிப்பார்ப்பதற்கான நுழைவுச் சீட்டை வாங்கினோம். எதோ விசாத்தருவது போல் படம் எடுத்து எமது படத்தையும் ஒட்டி தந்தார்கள். அந்த நுழைவுச் சீட்டை வேறுயாருக்கும் மாற்ற முடியாமல் இருப்தற்கான திட்டமே இந்த படம் ஒட்டும் படலம்.

தொடர்ச்சி 4ம் பக்கம்.






வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க
ஓசை 261



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com

**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன். B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் போர் வெற்றிக்கொண்டாட்டமும்







**இலங்கையில் இருந்து பாரதி**

முள்ளிவாய்க்காலில் கடந்த வாரம் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வும், அதற்கு மறுநாள் கொழும்பில் இடம்பெற்ற போர் வெற்றிக் கொண்டாட்டங்களும் இரண்டு விடயங்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. ஒன்று: யார் என்னதான் சொன்னாலும் இலங்கை இரண்டாகப் பிளவுபட்டுள்ளது என்பது முதலாவது. சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களுக்குப் பரிகார நீதியையோ அரசியல் தீர்வையோ வழங்கப்போவதில்லை என்பது இரண்டாவது. கொழும்பு போர் வெற்றி நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிகழ்த்திய உரை இதனைத் தெளிவாகக் காட்டியிருந்தது.

2009 இல் இரத்தத்தால் தோய்ந்த முள்ளிவாய்க்கால் நிலம், கொல்லப்பட்ட, காணாமலாக்கப்பட்ட உறவுகளின் கண்ணீரால் கடந்த மே 18 இல் நனைந்தது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும், வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அங்கு நிகழ்த்திய உரையும், சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சியை மீண்டும் ஒரு தடவை தட்டிச் சென்றிருக்கும். அதேவேளையில், அது குறித்த தென்னிலங்கையின் எதிரொலியும், ஜனாதிபதி மைத்திரியின் உரையும் யதார்த்த நிலைமையை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியிருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை, வெறுமனே ஒரு வருடாந்த நிகழ்வாகப் பார்ப்பதற்கு மேலாக ஒன்பது வருடமாக ஒரு இனத்துக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி வழங்கப்படாததை, வெளிப்படுத்திய ஒரு நிகழ்வாகவே பார்க்க வேண்டும். இறுதிப் போரின் வலிகளுடன்தான் மக்கள் இன்றும் வாழ்ந்து கொண்டுள்ளார்கள். அந்த வலிகளோடுதான் மக்கள் முள்ளிவாய்காலில் ஒன்றிணைந்தார்கள். தமது தீராத வலியை, கூட்டு மனவடுவை இங்கு ஒன்றாகக் கூடி ஆற்றுப்படுத்தினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். முள்ளிவாய்க்கால் என்பது மக்களின் கூட்டு மனவடு. இந்த வருடத்துடனோ, அடுத்த வருடத்துடனோ தீர்ந்துவிடும் மனவடுவல்ல இது. இங்கு இடம்பெற்ற கொடுமைகளுக்கு எப்போது நீதி வழங்கப்படும் என்ற கேள்வியோடுதான் கொல்லப்பட்டவர்களின் உறவுகள் கூடியிருந்தார்கள்.

சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரையில், முள்ளிவாய்க்காலில் அது தன்னுடைய பொறுப்பிலிருந்து தவறியிருந்தது. பாரிய இனப்படுகொலை ஒன்று இடம்பெறப் போகின்றது என்பதை தெரிந்துகொண்டிருந்தும் அதனைத் தடுப்பதற்குத் தேவையான நகர்வுகளை அது மேற்கொள்ளவில்லை. இங்கு உரையாற்றிய முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் இதனைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

"றுவாண்டா, பொஸ்னியாவில் இனப்படுகொலைஇடம்பெற்ற காலமும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம்பெற்ற காலமும் வேறுபட்டவை. முன்னைய படுகொலைகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்ட சர்வதேச சமூகம் இப்படியான கொடூரங்கள் இனிமேலும் எந்த நாட்டிலும் இடம்பெறக்கூடாது என்ற நோக்கில் பல்வேறு மனித உரிமைகள் பொறிமுறைகளை ஏற்படுத்திய பின்னரே முள்ளிவாய்க்கால் படுகொலை இடம்பெற்றது. ஆகவே சட்டங்கள் ஓரளவு வலுவாக இருந்த போதே இந்தப் பேரவலம் நடந்தேறியது" என்பதை முதலமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்.

23ம் பக்கம் பார்க்கவும்

## வெற்றிமணி யேர்மனியில் 25 வது ஆண்டில் தடம் பதிக்கிறது.

### வெற்றிமணி மிகப் பணிவுடன் சில முதல்கள்!

ஐரோப்பாவிலே வர்ணத்தில் வெளிவந்து, 25வது ஆண்டில் தடம்பதிக்கும் (01.06.2018) முதலாவது இலவசப் பத்திரிகை வெற்றிமணி.
பல புலம்பெயர் படைப்பாளிகளின் நூல்களை (யேர்மனியில்) வெளியிட்ட பத்திரிகை வெற்றிமணி.
யேர்மனியில் முதலாவதாக ஆன்மீக சஞ்சிகை (சிவத்தமிழ்) வெளியிட்டது வெற்றிமணி 2004
யேர்மனியில் முதலாவது ஓவிய சிற்பக்கண்காட்சி 1981 (வெற்றிமணி ஆசிரியர்)
யேர்மனியில் முதலாவது வெளிவந்த வர்ணமலர் "புதியவடிவங்கள்! 1990
ஐரோப்பாவிற்கான தமிழர்தகவல் விருதினை பெற்ற முதல் பத்திரிகை ஆசிரியர்



பிரதம ஆசிரியர்
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

(இத்தகவல்கள் கையெழுத்துபிரதிகள், போட்டோக்கொப்பி, வர்ணங்கள் தவிர்த்து, அச்சில் வந்தவை மட்டுமே!)

வெற்றிமணியின் வெற்றிப் பயணத்தில் கூட வந்தவர்களுக்கும், வருபவர்களுக்கும், இதயம் கனிந்த நன்றிகள்



2ம் பக்கத் தொடர்ச்சி கம்போடியாவிற்கு இன்றும் தமிழ் ......



ஆலயத்தின் உச்சியில் உள்ள தீர்த்தக் குளம் மற்றும் மேலே ஏறும் படிகளும்

அங்கோவாட் ஆலயம் பற்றி அங்கு வழிகாட்டிகள் (Guide) ஆளுக்கு ஒரு கதை விடுகிறார்கள். வெளிநாட்டு பெண்களுக்கு ஒரு கதை, ஆண்களுக்கு ஒருகதை,அவர்களுக்கு கவரக்கூடியவிதத்தில் சொல்கிறார்கள்.
சேர,சோழ,பாண்டிய மன்னர்கள் காலத்திலிருந்து நோக்கினாலும் ஒவ்வொரு மன்னனும் தங்கள் தங்கள் படைப்புக்களை நிலைநிறுத்துவதும், தமக்கு முன்னைய மன்னரின் படைப்புக்களை மறைப்பதும் அழிப்பதும் வழக்கமான ஒரு மரபாகவே கடைப்பிடித்திருந்தனர். இது அன்று இல்லை இன்றைய அரசியல் வரை அனைத்து நாடுகளிலும் தொடர்கிறது.

அதாவது பதவியில் இருப்பவர்கள் சரித்திரம் எழுதுகிறார்கள். இதனை வின்சன் சேச்சில் அவர்கள் அழகாகக் கூறுகிறார். 'History is written by victors" என்று. Winston Churchill சொன்னது நம் தமிழினத்திற்குத்தான் என்பது சரியாகப் பொருந்துகிறது.
அங்கோர் வாட் (Angkor Wat) என்பது, அங்கோர், கம்போடியாவில் உள்ள இந்துக்கோயிலாக இருந்து பின்னர் புத்த மதக் கோயிலாக மாறிய ஒரு தொகுதியாகும். 162.6 எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இது உலகின் மிகப்பெரிய மத வழிபாட்டுத் தலமாகும். 65 மீற்றர் உயரமான கோபுரமும் அதனைச் சுற்றி நான்கு கோபுரங்களும் கொண்டது. இந்தக் கோபுரங்கள் வழமையான கோபுரங்களைவிட சற்று வேறுபட்டது. அது மேருமலையை நினவுபடுத்துகின்றது.
இது பல்லவமன்னன் ஆகிய இரண்டாம் சூரியவர்மன் (கிபி 1113-1150) என்பவரால் 12ஆம் நூற்றாண்டின் போது யசோதரபுரத்தில் (இப்போதைய அங்கோர்) கட்டப்பட்டது. இது மாநில கோயிலாகவும், கல்லறை மாடமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இரண்டாவது சூரியவர்மனின் மறைவிற்குப்பின் ஜெயவர்மன் பௌத்தமதத்தை தழுவியதாகவும். அதன்பின் விஸ்னு அகற்றப்பட்டு புத்தர் அரங்கேறியதாகவும் சொல்லப்படுகின்றது.
இலங்கையில் நாம் கட்டிய வீட்டில் இராணுவம் வசிப்பதுபோலவும், கம்போடியாவில் 2ம் சூரியவர்மன் கட்டிய அங்கோவாட் ஆலயத்தில் சிவனையும் காணவில்லை விஸ்ணுவையும் காணவில்லை. அவர்களது தலை உடைக்கப்பட்டு தலையெழுத்தை மாற்றி வைத்துள்ளது அரசு.



முன் நுழைவாசலில் பௌத்தமதத்தின் சின்னங்கள் தற்காலி கமாக நிறுவியுள்ளனர்.

சிவனை வழிபடும் பரம்பரையில் வந்த சூரியவர்மன், சிவ வழிபாட்டை அங்கும் நிலைநாட்டியுள்ளார். இன்று புத்த கோவில்களாக இருக்கும் பல கோவில்களில் இன்றும் சிவலிங்கமும் அதன் பீடமும் காணப்படுகின்றன.

ஆசைகளைத் துறந்த புத்தர் அங்கு நடுநாயகமாக எங்கும் அமரவைக்கப்பட்டுள்ளார். கவனிக்கவும் அமரவில்லை அமரவைக் கப்பட்டுள்ளார். யுனிஸ்கோ நிறுவனம் உலகில் மிகப்பெரிய பழமையான அங்காவாட் ஆலயத்தின் மேல் குறுக்கும் மறுக்குமாக கலிக்கொப்டர்கள் விமானங்கள் பறக்கத் தடைவிதித்துள்ளது. ஆனால் குறுக்கு மறுக்குமாக ஆலய சரித்திரத்தை மாற்றிடும் அரசுகளுக்கு எந்த தடையும் விதித்ததுபோல் தெரியவிலை.
ஆலயத்தின் முன் நுழைவாசலில் பௌத்தமதத்தின் சின்னங்கள் தற்காலி கமாக நிறுவியுள்ளனர். மனதில் பௌத்த சிந்தனையுடன் உள்ளே செல்ல இவை வழிவகுக்கும். நாளை மெல்ல மெல்ல இவை நிரந்தரமாக கற்களால் (கொஞ்சம் அங்கோவாட் ஆலயத்தில் இருக்கும் கற்களையும் கலந்து ஒரு கலப்பட நுழைவாயில் அமைத்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.)

ஆலயத்தின் உள்ளே பெரும் சுற்று வீதியும் தீர்த்த தடாகங்களும், அதி உச்சியில் 45 படிகள் ஏறி மேல்சென்றால் வைகுண்டம் தெரியும்போல் இருக்கும். அந்த உயரத்தில் உள்ளே நான்கு தீர்த்த தடாகங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அந்த உயரத்திற்கு அத்தனை பெரிய கற்களை எப்படி எடுத்துச் சென்றார்கள் என்பது இன்றுவரை புரியாத ஒன்றே! படி ஏறும் போதே நமக்கு மூச்சு வாங்குது என்றால் அது கட்டும்போது எத்தனை பேர் மூச்சை வாங்கியிருக்குமோ?
அங்கே ஆதி முலமாக சிவன், விஸ்னு, இப்போ புத்தர் அமர்ந்திருக்கின்றார். சிவன் ஆரம்பத்தில் இருந்திருக்கலாம் என்பதற்கு கம்போடியாவில் சிவவழிபாடு சிறப்பாக இருந்துள்ளது என்பதனை பல சான்றுகள் பகர்கின்றன.

இந்து ஆலயத்தின் அசல் வடிவங்கள் என்பதும் திராவிட கட்டிடமரபுகள் உள்ளடக்கியதும் இங்கு தெரிகின்றது. ஆலயச் சுவர்களில் பௌத்த கலைவடிவங்கள் செதுக்கப்பட்ட சிற்பங்களாக உள்ளன.( அவற்றில் சில புதியனவாகத் தெரிவது வேறு கதை)

"இந்த கோவில் கட்டுமானத்தின் பிரமாண்டத்தை பேனாவால் கூட விவரித்து எழுதிவிட முடியாது" என்று கூறியுள்ளார். இதை சுற்றி பார்த்த அமெரிக்க பெண் ஒருவர் 'நான் இறந்தபிறகு என் உடலை எரியூட்டி சாம்பலை அங்கோர்வாட் கோவில் பகுதியில் தூவுங்கள்' என்று எழுதி வைத்துள்ளார்."
பின்னர் "ஹென்றி மௌஹொட்" என்ற பிரெஞ்சு எழுத்தாளர் தன் புத்தகத்தில் இந்த கோயிலின் சிறப்பை வெளிட்டவுடன் தான் இதன் புகழ் உலகம் முழுக்கும் பரவத்தொடங்கியது .
பின்னர் இங்கு ஆய்வு பணிகளை மேற்கொண்ட பிறகு தான் இது தமிழர்கள் கட்டியது என்று தெரியவந்தது. இன்றைக்கு இருக்ககூடிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டினால் கூட, இப்போதைக்கு இது போன்ற ஒரு கட்டிடம் கட்ட 300 ஆண்டுகள் ஆகும் என ஒரு பொறியாளர் கூறி உள்ளார்.ஆனால் எந்த தொழில் நுட்பமும் இல்லாத அந்த காலத்தில் வெறும் 27 ஆண்டுகளில் இது கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.
ஒவ்வொரு கல்லும் 1.5 டன் எடை கொண்டது. இந்த கற்களை 40 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மலையில் இருந்து வெட்டி எடுத்து வந்துள்ளனர்.
உடைந்துபோன சிற்பங்களை பிரதிபண்ணி அமைப்பது என்ற வேலையில் தங்கள் தங்கள் மதச் செல்வாக்கை அங்கு காட்டியுள்ளனர்.
அங்கு சுற்றுலா வருபவர்களை அழைத்துச் செல்லும் வழிகாட்டிகள் தங்களுக்கு தெரிந்ததை மட்டுமல்ல எது தெரியப்படுத்தவேண்டும் என்பதில் மிகவும் முனைப்பாக உள்ளனர்.

பொதுவாக உலக சரித்திரம் அறிய ஆவலானவர்கள் ஓரளவு அது பற்றிப்படித்த பின்னரே அதனைப்பாரக்க் வருகின்றனர். அதிலும் இளம் சந்ததியினர் இணையத்தில் சகலவிடையங்களையும் எடுத்து அலசி ஆராய்ந்து அதில் உள்ள சந்தேகங்களை தாம் பார்த்து உணரவும் பகிரவும் விரும்புகின்றனர். இதனை அருகில் நின்று என்னால் பாரக்க முடிந்தது.
ஒரு இளம் பெண் வீட்டில் வைத்த பொருட்களை தான் வைத்த இடத்தில் இருந்து சுலபமாக எடுப்பது போல் அங்கோவாட் ஆலயத்தில் இருக்கும் இடங்களை சட்டு சட்டென பார்த்து எடுத்துச்சொல்கிறாள். ஒரு வழிகாட்டியை விட நடுநாயகமாக கலைநயத்துடன் எடுத்துச் சொல்கிறாள். அவர்களுக்கு நடுவில் சிறிதுநேரம் நின்றால் போதும் பலவிடையங்களை நாம் தெரிந்து கொள்ளலாம். ஒரு உண்மைய ஒத்துக்கொள்ள வேண்டும். நம்மவர் பலர் காட்சிப்பொருளாகப் பார்பதை வெளிநாட்வர்கள் பலர் ஆய்வுப்பொருளக கருதுகின்றனர்.

தொடர்ச்சி 8ம் பக்கம்.






25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

**TAMIL-PARCEL.de**

**Next submission date:** 2018 30 JUNE

# இலங்கைக்கு பார்சல் அனுப்ப விரும்புகிறீர்களா?

**Tamil-Parcel.de ஐ நாடுங்கள்!**

- ✓ 60 x 40 x 40 cm அளவு பெட்டிகள்
- ✓ பெட்டியின் உள்ளடக்கம் 40Kg
- ✓ பெட்டி மற்றும் டேப் றோல் இலவசம்
- ✓ நீங்கள் வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பார்சல்கள் தாயகத்தில் உள்ள உங்கள் இல்லங்கள் தேடி நேரடியாக கொடுக்கப்படும் (Door-to-Door Delivery)




*Our partners near you:*
Arnsberg • Bochum • Bonn • Brüggen • Dortmund • Duisburg • Essen • Frankfurt • Heidelberg • Heilbronn • Hornberg • Herne • Hückelhoven • Krefeld • Mannheim • Mönchengladbach • Neuss • Mörfelden-Walldorf • Mühlacker Mühlheim • Solingen • Stuttgart • Wuppertal

3 பார்சல்கள் அனுப்பினால் 4ஆவது பார்சல் இலவசம்

**BEST PRICE PROMISE**


ஒரு பார்சல் அனுப்பும் கட்டணம் 55€ மட்டுமே

**PARCELS TO COLOMBO ONLY 50€**

**www.Tamil-Parcel.de**

FOR MORE INFORMATION, PLEASE CALL:
**0176 56841676**
**0176 24889539**


25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்




# என்னை ஜப்பானுடன் ஒப்பிடாதீங்கள்!

தாயகத்தில் 1966 களில் பாடசாலை விடுமுறை விட்டு தொடங்கும் போது, சில சமயம் எங்கடை கார்தான் எம்மைக் கூட்டவருதா அல்லது இது வேறு காரா என எண்ணும் வண்ணம் சிலசமயம் தடுமாறவைக்கும் எமது காரின் தோற்றம்.



ஆம் நாம் பாடசாலைக்கு செல்லும் எங்கள் சோமசெற் கார் முன்பக்கம் துருப்பிடித்து லைட் கண்ணாடி உடைந்து பாதிதொங்க ஒற்றைக் கண்ணனாகவும், சீட் எல்லாம் கிழிந்து, அதனடியில் இருக்கும் ஸ்பிறிங்கம்பி குண்டியில் குத்தாமாலும் தடிச்ச போர்வை போட்டு மூடி இருக்கும்.

ஆனால் இப்பொழுதோ நிமிர்ந்த சிங்கம்போல் கண்ணைக்கவரும் கடும் பச்சை நிறத்தில், எந்த பள்ளம் மேடும் இல்லாமல் பளிங்குபோல் ஜொலிக்க, முன் போணற் திறக்கும் பிடியில் ஒரு சிங்கம் பாயா, அடா எப்படி வர்ணிப்பது இப்ப அந்தக் காரை.

மொத்தத்தில் உள் இருந்த இஞ்சினைத் தவிர அத்தனையும் புதிதாய் பிறந்த குழந்தமைமாதிரி சிரித்துக்கொண்டு இருக்கும்.

கார் கியர் மாற்றினால் சத்தம் நாலு சந்திக்கு கேட்கும். கோண் அடித்தால் அதுகூட அழுவதுபோல் அலறும். இப்ப தேவை இல்லாமலே கோணை அடித்துக்கொண்டு வந்து நிற்கிறது. தன் குயிலோசையை காட்டக் கூவும் கூயில் போல. இது எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால். அன்று இருப்பதை பாதுகாப்பதும், அதனை அப்படியே புதிதாக வடிவமைப்பதும் சாதரண ஒரு மெக்கானிக்கு கூடத் தெரியும். கார் இஞ்சின் சிலிண்டர், உள்ளே தேய்ந்து விட்டால், அந்த சிலிண்டர் ஓட்டைக்குள் ஒரு இரும்பை அடித்து, பின் இருக்கும் தேந்த சிலிண்டருக்கு அளவாக ஓட்டையை மீண்டும் கடைந்து எடுத்து சிலிண்டரைப் பொருத்திவிட, சத்தம் போட்டுக்கொண்டு கார் புறப்படும்.

ஏன் சத்தமாக இருக்கிறது என்று கார் சொந்தக்காரன் மெக்கனிக்கை கேட்டால். அவர் சொல்லும் பதில் ஒரு நாட்டுவைத்தியரை மிஞ்சியதாக இருக்கும். ஆனால் அது அவர் சொன்னபடி நடக்கும். அதாவது காரை ஓடுங்கள் ஓட ஓட அது தேய்ந்து சரியாக வர சத்தம் நிற்கும் என்று.

இப்படி ஒரு காரை முழுதாகத் தயாரிக்காவிட்டாலும் முப்பது வருடம், நாற்பது வருடம் சென்றாலும் கார் தெருவில் ஓடும் வண்ணம் அதனை பாதுகாத்து தேவையானவற்றை தாமே செய்து, பொருத்தும் வல்லமை அன்றும் இருந்தது.

இன்று யேர்மனியில் ஒரு லைட் கண்ணாடி உடைந்தால் லைட்டை முழுதாக மாற்றவேண்டும். கதவு நெளிந்தால் முழுதாக மாற்றவேண்டும். ஆனால் அங்கு இன்றும் எந்த இடத்தில் நெளிவு இருந்தது என்று படைத்தவனாலும் கண்டுபிடிக்க முடியாமல் மீளாக்கம் செய்வதில் வல்வர்களாக நம்மாவர்கள் திகழ்கிறார்கள்.

### யாழ்ப்பாணத்தில் தயாரித்து வாகனக் கண்காட்சி

ஒரு இஞ்சின் இருந்தால் போதும், வாகனம் பறக்கும் என்ற நிலைதான் அன்று இருந்தது. ஆனால் முழுதாக நாம் கார் தயாரிக்க வேண்டும் என்ற சிந்தனை உதிக்க தன்னம்பிக்கை அன்று வரவில்லை. அது மட்டுமன்றி அதற்கான ஆதரவு கொடுப்ப தற்கும் எவரும் இல்லை.

இன்று அதாவது விடுதலைப் போராட்டத்தின் போது நமது பொருட்களை நாமே செய்யலாம் என்ற நம்பிக்கை உதித்தது.



Made in Jaffna

தேவையும் இருந்தது. ஆதற்கான ஆதரவும் இருந்தது. அதன் ஒரு கட்ட நகர்வாக இன்று மீண்டும் சுயமுயற்சி சுடர்விடத்தொடங்கியுள்ளது.

இன்று யாழ்ப்பாணத்தில் சுயமாக வாகனங்களைத் தயாரித்து கண்காட்சிப்படுத்தும் நிகழ்வு கடந்த 13.05.2018 ஞாற்று யாழ்பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெற்றது. முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.யாழ்.பல்கலைகழக பௌதீக கல்வி அலகு இயக்குனர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலப் போதனா மொழியியல் துறைப் பேராசிரியர் மகேஸ்வரக்குருக்கள் சரவணபவ ஐயர் மற்றும் அவரது குழுவினரது தயாரிப்பில் முற்று முழுதாக யாழ்ப்பாணத்தில் உருவான கார்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கண்காட்சியில; “Jaffna style gokart” “Solar powered baby car” “pedal power car” “Ultralight pickup” உள்ளிட்ட நான்கு வகையான கார்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. தொடர்ச்சி 06ம் பக்கம்.



## Made in Jaffna



கண்காட்சியின் ஒரு கட்டமாக கார்களின் பவனியும் இடம்பெற்றது. குறித்த கார்களை சிறார்கள் எளிதாகச் செலுத்திப் பார்வையாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர். குறித்த கண்காட்சி மற்றும் கார்களின் பவனியை ஏராளமானோர் ஆர்வத்துடன் கண்டு களித்ததுடன் கார்களுடன் நின்று புகைப்படங்களும் எடுத்துக் கொண்டனர்.
மேற்படி கார்களைத் தயாரித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலப் போதனா மொழியியல் துறைப் பேராசிரியர் மகேஸ்வரக்குருக்கள் சரவணபவ ஐயர் கருத்துத் தெரிவிக்கையில்,

நான் பேராசிரியராகக் கடமையாற்றி வரும் நிலையில் எனக்கு கிடைக்கும் ஓய்வு நேரங்களில் யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் விற்கப்படும் பழைய பொருட்களைப் பயன்படுத்தி சுமார் ஒரு வருடம் இரண்டு மாதங்களாக நேரத்தைச் செலவழித்து எனது குழுவினருடன் இணைந்து இந்த நான்கு கார்களையும் தயாரித்துள்ளோம்.
எமக்கு நேரமும், ஆக்கம் செய்யக் கூடிய தகுதிகளுமிருக்கின்றன. நாம் அதனைச் சரியான வழியில் பயன்படுத்தும் போது எமது சமூகத்திற்கும், நாட்டுக்கும் நல்ல வெளியீடுகளை நாம் வெளியிட முடியும்.

அனைத்துப் பொருட்களையும் நாங்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கின்றோம். உதாரணமாக உணவுப் பொருட்களை நாங்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கின்றோம். இந்த நிலையை நாங்கள் மாற்ற வேண்டும்.
எங்களிடமுள்ள பொருட்களை வைத்தே நாங்கள் உள்ளூரிலேயே பொருட்களைத் தயாரிக்கக் கூடிய மதிநுட்பம் எங்களிடமிருக்கிறது. இதனை நாங்கள் உரியவாறு பயன்படுத்தினால் எதிர்காலத்தில் எங்களுடைய சமூதாயம் தனியே தேசிய வருமானத்தை ஈட்டக் கூடியதொரு நாடாக வளரும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையிருக்கிறது.



இவ்வாறான கார் உற்பத்திகளைத் தயாரிப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து அனுமதியைப் பெற்றுக் கொள்வது மிகவும் சிரமமானதொன்று. அவ்வாறான அனுமதி இல்லாமல் நாங்கள் கார்களைத் தயாரிப்பது சட்டத்திற்கு முரணானது என்பதால் நாங்கள் சிறியளவிலேயே எமது பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றோம் என்றார்.

உண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள வளங்களைப் பயன்படுத்தி இவ்வாறான கார் உற்பத்திகளைத் தயாரித்திருப்பது மிகுந்த வரவேற்புக்குரியதொன்று. அதுவும் தமிழர்கள் இவ்வாறான தயாரிப்புக்களில் ஈடுபடுவது ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் பெருமை சேர்க்கும் விடயம் . ஆனால், அரசாங்கத்தின் அனுமதி இல்லாத காரணத்தால் வீதிகளில் குறித்த கார்களைச் செலுத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. என்றார்.



அன்று இருப்பதை திருத்தி புத்துயிர் கொடுத்த வல்லுநர்கள் இன்று முழுதாகவே பூரணமானதாக இல்லாவிட்டாலும் நமது என்று மூச்சோடு வரும் இந்த உற்பத்தி நிச்சயம் உச்சத்தை தொடும். இதற்கு அரசு ஆதரவு வழங்கவேண்டும். இவர்களை ஊக்கப்படுத்தவேண்டும்.
நாம் நம்மவர்கள் செயல்களை பாராட்டியும் அவர்களுக்கு பக்கபலமாகவும் இருந்து செயற்பட வேண்டும். அவர்களது படைப்புடன் யப்பான் காரையோ யேர்மன் கரையோ ஒப்பிட்டு பேசல் ஆகாது.

இது மேடின் • யவ்னா என்று ஆங்கிலத்தில் சொன்னாலும் குறையில்லை. நம்மவர் தயாரிப்புக்கள் உச்சம் பெறவேண்டும். பனங்கட்டி தயாரிப்பதை விட்டுவிட்டோம். நெல்லிரசம், சவர்க்காரம், காய்கறித்தோட்டம் இப்படி பல காணமற்போய்க்கொண்டு இருக்கின்றன.

காசை காசாலே உழைக்கவேண்டும் என்று ஒரு கூட்டம் அலைகிறது. காசை ஒரு உற்பத்தி மூலம் காணவேண்டும் என்ற எண்ணம் அருகிப்போகிறது. இதற்கு புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் பொறுப்பு.

கணனி பழுதாகிவிட்டது என்றால் உடன் இங்கு இருந்து வட்சப்பில் மசேச்போகும், திருத்தம் காசுக்கு புதுசு வாங்கலாம் அனுப்பிறேன் புதுசு வாங்கவும். இப்படி நாம் செய்தால் அங்கு சுயமுயற்சி எப்படி வரும். பனங்கட்டி செய்யும் இடத்தில் சென்று பனங்கட்டி கேட்க அவர்கள் சொன்ன பதில் இப்ப நாங்கள் செய்வதில்லை, வெளிநாட்டில் இருக்கும் மகள் பேசுவாள்! நாம் செய்வதை விட்டுவிட்டோம். காசு மகள் ஒழுங்கா அனுப்பிறாள்.
அது சரி இந்த பனங்கட்டி செய்யும் கலையை யாருக்கம் கற்றுக் கொடுக்கலாம் அல்லவா? இன்று கார் தயாரிப்பும் உது தேவை இல்லாத வேலை! நான் காசு அனுப்பிறேன் சும்மா முறியாதை என்று நாம் எழுதினால் எம் இனத்தின் ஆற்றல் முறிந்துவிடும்.





Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.

**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளளோம்

NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

www.Nandys.de
e.mail:info@nandys.de

25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# சாலையோர சரஸ்வதிகள்...!

தனசேகர் பிரபாகரன்





மென்பொருள் வேலை, பெற்றோரிடமிருந்து பல நாட்கள் அந்நியப்பட்டோம், கைபேசி முதல் காலணி வரை ஒரு சொடுக்கில் வாங்குகிறோம்...! எண்ணி எண்ணி செலவழிந்த திருமகள் இன்று "அட்டைக்குள் அடங்கி" தண்ணீராய் ஓடுகிறாள். இவ்வாறு பல முகங்கள் அலையும் சென்னையில் நானும் ஒரு முகம்...

சென்னையில் நடந்தும், பேருந்திலும், இரயிலிலும் செல்வபவர்க்கு புலப்படும் காட்சிகளே தனி, அப்படி ஒன்று, சுற்று வட்டாரத்திலிருந்து சென்னை நோக்கி வரும் முதியவர்கள்

நமது பாட்டிமார்களை நினைவுக்கு வரச்செய்யும் இவர்கள். தம் ஊர்களிலிருந்து பனங்கிழங்கும், கருபட்டியும், கீரைகளும் எடுத்து வந்து சென்னையின் சாலை ஓரங்களிலும், இரயில் நிலையங்களிலும் விற்கின்றனர். பெரும்பாலும் பிள்ளைகள் கைவிட்டாலும் தன் சொந்த உழைப்பால் உணவு உண்ணும் போராளிகள்

"டீசயனெநன" கலாச்சாரத்தில் மூழ்கிய நாம் இவர்களை கண்டுகொள்வதே இல்லை, அப்படி கண்டுகொண்டாலும் நமது வழக்கறிஞர் திறமையை காட்டி பேரம் பேசுவதே வாடிக்கை ! ஆயிரம் ஆயிரம் கண்ணிமைக்கும் நேரத்தில் "வசநயவ" "யசவல" என்ற பெயரில் வீணடிக்கும் நாம்...இவர்களிடம் 1 ரூபாய் குறைத்து வாங்கினால் விண் முட்டிய சந்தோஷம்.

ஒரு நாள் இரவு 9 அளவில் அலுவலகம் நீங்கி இல்லம் சேரும் நேரம், தாம்பரம் இரயில் நிலையம் அருகில் ஒரு வயதான மூதாட்டி கூடையில் கிழங்கோடு, யார் வாங்குவர் அந்நேரம் ? பாவம் என்ன கஷ்டமோ ? இப்படி பல பேர் உண்டு சென்னையில்

மனதுக்குள் உடனே ஞாபகம் வந்தது இந்த கதை தான்...

ஆயிரம் ஆண்டு பின் செல்வோம்...தமிழக காதலர்கள் உவமை கூற உபயோகிக்கும் பெயர் "அம்பிகாபதி", இவர் கம்பரின் மகன். இவன் அந்த நாட்டு மன்னன் ( சோழன் என்பர்) மகள் அமராவதியை காதலித்தான்...சோழனுக்கு தெரிந்தால் தலை தப்பாது...

இதற்கிடையில் ஒருமுறை ஒரே பந்தியில் அமர்ந்து சாப்பிட கம்பர், அம்பிகாபதி, சோழர், ஒட்டக்கூத்தர் ஆகியோர் ஆரம்பித்தனர். அப்போது அமராவதி எங்கிருந்தோ வந்தாள். அவளும் ஒரு வட்டிலைச் சுமந்துகொண்டு ஏதோ பலகாரத்தைப் பரிமாற வந்தாள்.

அதைக் கண்ட அம்பிகாபதி தம்மை மறந்து,
இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய.........
என்று பாட ஆரம்பித்தார்.

சோழனுக்கு இதைக் கண்டு பொசு பொசுவென்று கோபம் வந்துவிட்டது. இன்னும் ஒரு விநாடிதான். கோபவெறி ஏற்பட்டிருக்கும். அதன் விளைவு விபரீதமாக இருந்திருக்கும்.

நிலைமையை உணர்ந்த கம்பர் உடனேயே இடைவெட்டிப் பாடினார்....
........................- கொட்டிக் கிழங்கோ கிழங்கென்று
கூவுவாள் தந்நாவில் வழங்கோசை வையம்பெறும்.

இவ்வாறு பாடலை முடித்தார்..

தன் மகன் வீதியில் கிழங்கு கூவி விற்று செல்லும் கிழவியின் நிலையறிந்து பாடியதாய் சொன்னனர்...இதற்குள் ஒட்டகூத்தர் குறுக்கிட்டார், தனக்கு எந்த கிழவியின் குரலும் கேட்கவில்லை, இது இளவரசியை நினைந்தே பாடியது என்றார்...

சோழன் ஆட்களை ஏவி வீதியை பார்த்துவரச் சொல்ல... உண்மையில் அப்படி யாரும் இல்லையென கம்பருக்கும் தெரியும்...ஆனால் இளவரசி மீது காதல் பாடல் பாடியது தெரிந்தால் மகனின் தலை போய்விடுமே... இதற்கிடையே கம்பர் செய்வதறியா கலைமகளை வேண்டினார்...

சற்றுநேரத்திற்கெல்லாம் சாளரத்துக்கு வெளியிலிருந்து ஓங்கி ஒரு பெண் குரல் இனிமையாகக் கேட்டது.............
கொட்டிக்கிழங்கோஓஓஓ... கிழங்கு!
கொட்டிக்கிழங்கோஓஓஓ...கிழங்கு!
கொட்டிக்கிழங்கோஓஓஓ...கிழங்கு!

விரைந்து சென்று வெளியில் எட்டிப்பார்த்தார் சோழர்.
அங்கு ஒரு பெண் வட்டிலைச் சுமந்துகொண்டு அதில் கோட்டிக்கிழங்குகளை வைத்துக்
கொண்டு கூவி விற்றுக்கொண்டே வந்தாள். அந்த கிழவியை வீரர்கள் அழைத்து வந்தனர்
தன்னையும் தன் தனையனையும் காப்பாற்ற கலைமகளே வந்தால் என்று பூரித்தார் கம்பர்...!

இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய கொட்டிக்
கிழங்கோ கிழங்கென்று கூவுவாள் தந்நாவில்
வழங்கோசை வையம்பெறும்

கம்பன் கூறிய சொல்லை அவளே வந்து உண்மையாக்கி அவன் வாக்குக்கு ஏற்றம் கொடுத்தாள்.

இப்படி நாதோறும் பல கலைமகல்களை காணும் நாம்....இனியாவது முடிந்தவரை இவரிடத்தே பொருட்கள் வாங்குவோம்...பேரம் ஒன்றும் பேசாமல்...!



# நீங்கள் தமிழர்களை சந்திக்கும் வேளை
## எப்போதும் பேசும் மொழி தமிழா?



றஜினா தருமராஜா



ஓர் இனத்தின் அடையாளமே மொழியல்லவா! அம்மொழியிலே உரையாடாமல் எதற்காக வேற்று மொழியில் உரையாடவேண்டும்?
என்ன காரணம்? எதற்காக சிலர் வேற்று மொழியில் பேசுகிறார்கள்?

வெட்கமா? அல்லது தமிழ் மொழியில் சரளமாக உரையாட முடியவில்லை என்ற காரணமா? எதற்காக?

எங்கள் தாய்மொழியினை மறக்கமுடியுமா? முக்கியத்துவம் தாய்மொழிக்குத் தானே கொடுக்கவேண்டும்.

கூடுதலானவர்கள் தமிழ்மொழியில் அதிகநேரம் பேசுகிறார்கள். இங்கு பிறந்து வளர்ந்த சிலருக்குத் தாய்மொழியில் மட்டுமே உரையாடுவது கடினமாக இருக்கும். அவர்கள் யேர்மன் மொழியினையும் தமிழ்மொழியினையும் கலந்து உரையாடுவர்கள். யேர்மன்மொழியில் பேசுவது இலகுவாக இருக்கும்.

வீட்டில் மட்டுமே தமிழ்மொழியில் உரையாடும் இவர்களுக்கு குறைந்த மணிநேரம் பயிற்சி கிடைக்கின்றது. நண்பர்களும் வெளிநாட்டவர்களாக இருந்தால் மிகவும் கடினமாக இருக்கும்.

இந்நிலை தொடருமானால் தமிழ்மொழி மிகக் குறைவாக உரையாடப்படும். பின் வரும் காலங்களில் தமிழ் மொழி பேசுவது கடினமாக வந்துவிடும்.

ஆகவே தமிழ் மொழி அழிந்துபோகாமல் பாதுகாத்துப் பேணவேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமை.

முயற்சியெடுங்கள் சில நாட்களில் தமிழில் மாத்திரம் உரையாடுவதற்கு.

வேறு எந்த மொழியையும் பயன்படுத்தாது பேசிப் பாருங்கள். சிறு வயதிலிருந்து பேசிப் பழகவேண்டும். இப் பயிற்சியே தமிழ்மொழி அழிந்துபோகாமல் வளர்வதற்கு பயன்படுகின்றது.

4ம் பக்கத் தொடர்ச்சி கம்போடியாவிற்கு இன்றும் தமிழ் ......

அங்கோவாட் ஆலயத்தின் வெளி வீதியில் பனைமரங்கள் உள்ளன. அவற்றில் சுடச் சுட கள் இறக்கி விற்கிறார்கள். கள்ளு முட்டி இலங்கையில் சுரக்காயிலும், மண்பானை முட்டியிலும் இருக்கும். இங்கு மூங்கில் மரக்குழாயில் வைத்து இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள கள்ளு முட்டியில் முட்ட தேனிக்கள் மிதப்பது போலவே, இங்கும் மிதக்கின்றன. அதனை வடித்து விற்கிறார்கள். ஒரு மரத்துக் கள்ளு, உடன் பனைக் கள்ளு உடலுக்கு ஆரோக்கியமானது, அத்துடன் வெறிக்காது என்று சொல்கிறார்கள். இது நாம் எங்கேயோ கேட்டது போல் இல்லையா!

கம்போடிய மக்கள் நாட்டுப்பற்று மிக்கவர்கள். தங்கள் பொருட்கள் யாவும் உயர்ந்தவை தனித்துவமானவை ஒன்றையும் பிரதிபண்ணும் பழக்க மில்லாதவர்கள். என்பதனை டுக் டுக் ஓடும் சாரதி முதல் வாகனச் சாரிகள் வரை வார்த்தைக்கு வார்த்தை சொல்லிக் கொண்டே வாகம் ஓட்டுவார்கள்.

விஷ்னுவும், சிவனும் எங்கு என்று கேட்டால் புத்தனும் சிவனும் விஷ்னுவும் ஒன்றே என்பாரர்கள். புத்தர் விஷ்னுவின் அவதாரமே என்கிறார்கள். அப்படி என்றால் இருந்தவர்களை இருந்தபடியே விட்டிருக்கலாம் ஏன் விஷ்னு இடத்திற்கு புதர்வந்தார் என்றால். இங்குள் வைரம் பிரசித்தி பெற்றது எனக் கதையை மாற்றுவார்கள். ஒரு சந்தேகம் வாகன ஓட்டுநர் பரீட்சைக்கு நாட்டுப்பற்றும், மதப்பற்றும் உள்ளவர்களாக இருக்கவும் பயிற்சி கொடுத்திருப்பார்களோ?
பல வாகன ஓட்டுநர்கள் சாரதிப்பத்திரம் இன்றியே, பத்திரமாக வாகனங்கள் ஓடுவதாகவும், பத்திரம் வைத்திருப்பவர்கள் பலர் விபத்துக்கள் ஏற்படுத்துபவர்களாகவும் இருப்பதாக சாரதிகள் கூறினர். இந்தியன் படத்தில் வந்த சாரதி பத்திரங்கள் நிறைவாக உலாவருகிறதோ?
சுற்றுலாப் பயணிகளது காலம் சித்திரை வைகாசியுடன் முடிந்து பின் ஐப்பசிக்கு தொடங்கும்.

80 சதவீத வருமானம் சுற்றுலாப் பயணிகளாலேயே சியாம் றிப் நகரத்திற்கு கிடைக்கிறது. மொத்தத்தில் ஒரு தமிழ் மன்னன் இத்தனை ஆண்டுகளுக்கு முன்னரே, இந்த நகரத்துக்குரிய வருமானத்தை அங்கோர் வாட் ஆலயத்தின் மூலம் ஏற்படுத்தி விட்டு மறைந்துள்ளான். அவனது படம், சிலை எங்கும் இல்லை. ஆனால் இன்றை கம்போடியா மன்னனின் படம் மூலைக்கு மூலை இருக்கிறது.





தமிழ் மன்னன் கட்டிய அகன்ற ஆலயம் இருக்கிறது. தமிழ்தான் எங்கும் இல்லை. அதிகாரம் இல்லை என்றால் அகராதியிலும் தமிழ் இருக்காது. இந்த நேரத்தில் எங்கள் வீர மறவர்கள் நினைவு வருவது தவிர்க்க முடியாத ஒன்றே.






# நெஞ்சரிப்பை அலட்சிப்படுத்தக் கூடியதா?




Dr IN
டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

"கனநாளா இருமல். அடிக்கடி வந்து வந்து போகும். கன பேரிட்டை மருந்து எடுத்தனான். மாறும் பாடாக் காணயில்லை."

என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே நெஞ்சைத் தடவினார் அந்த தொந்தி பருத்த மனிதர். "நெஞ்சிலை என்ன?" எனக் கேட்டேன்.

"ஒன்றுமில்லை. நெஞ்சரிப்பு. அடிக்கடி வாறாது. இண்டைக்கு கொஞ்சம் கூடச் சாப்பிட்டிட்டன். அது தான்" என இழுத்தார். எனக்கு மின்னலடித்தது போல அவரது இருமலுக்கான காரணம் வெளித்தது.

நெஞ்சரிப்பு என்பது ஒரு இடைஞ்சல் தரும் உணர்வு். எரிவு போலவோ, வலிப்பது போலவோ, சூடு போன்றது போலவோ ஆனதொரு உணர்வு. பொதுவாக மேல் வயிற்றில் ஆரம்பித்து நடு நெஞ்சுக்கு வருவதுபோல இருக்கும். தொண்டைவரை பரவுவதும் உண்டு. சிலவேளைகளில் வாய்க்குள் புளித்துக் கொண்டு வருவது போலவும் செய்யும். செமியாத்தன்மை, சாப்பாடு மேலெழும்புவது, புளித்துக் கொண்டு வருதல், என்றெல்லாம் நாம் சொல்லுவதை ஆங்கிலத்தில் Heart Burn என்பார்கள்.


எப்படி அழைத்தாலும் இப்பிரச்சனைக்கும் இருதயம், மாரடைப்பு போன்ற பயமுறுத்தும் நோய்களுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. ஆயினும் மிக அரிதாக மாரடைப்பானது நெஞ்சில் எரிவதுபோல வெளிப்படுவதுண்டு என்பதையும் மறுப்பதற்கிடடலை.

பெரும்பாலும் நெஞ்செரிப்பானது உணவிற்குப் பின் வருவதை நீங்களும் அனுபவித்திருக்கலாம். உணவின் பின்
இரண்டு மணி நேரம்வரை கூட நீடிக்கலாம். குனிவதாலும் படுப்பதாலும் இது திடீரென ஏற்படவும் வாய்ப்புண்டு. அவ்வாறான தருணங்களில் எழுந்திருந்தால், அல்லது எழுந்து நின்றால் அதிலிருந்து நீங்கள் விரைவில் விடுபட முடியும்.

அடிக்கடி நெஞ்செரிப்பு வருபவர்கள் சாப்பிட்ட உடன் படுக்கைக்குப் போகக் கூடாது. சாப்பிட்டு
இரண்டு மணிநேரமாவது கழிந்த பின்னர்தான் படுக்கைக்குப் போக வேண்டும்.

இரைப்பைக்குள் வழமையாக இருக்கும் அமிலம் அல்லது அத்துடன் சேர்ந்து குடலில் உள்ள உணவுகளும் மேலெழுந்து நெஞ்சுப் பகுதியில் உள்ள உணவுக் குழாயின் இன்னொரு பகுதியான களத்திற்குள் (Oesophagus) ஊடுருவுவதாலேயே நெஞ்சரிப்பு ஏற்படுகிறது. இரைப்பைக்குள் இருப்பவை மேலெழுந்து நெஞ்சுப் பகுதிக்கு வருவதைத் தடுக்கும் 'வால்வ்' (Lower oesophageal spincter) சரியாகச் செயற்படாததாலேயே இப்பிரச்சனை ஏற்படுகிறது. இதனால்தான் கருப்பையில் உள்ள குழந்தையானது இரைப்பையை அழுத்துவதால் கர்ப்பமாயிருக்கும் காலங்களில் தாய்க்கு அடிக்கடி நெஞ்செரிப்பு வருவதைக் காண்கிறோம்.

பொரித்த உணவுகள், கொழுப்புப் பண்டங்கள், சொக்கிளேட், பெப்பர்மின்ட், கோப்பி,மென் பானங்கள், மது போன்றவை நெஞ்செரிவைத் தூண்டும். நெஞ்செரிவு உள்ளவர்களுக்கு புளிக்கும் தன்மை உள்ள தோடம்பழம், தேசி, அன்னாசி போன்ற பழவகைகளும் கூடாது. உள்ளி, வெங்காயம், தக்காளி, மற்றும் காரமான உணவு வகைகளும் நோயைத் தீவிரமாக்கலாம்.



புகைத்தலும், புகையிலையும், அத்துடன் கூடவே வலிநிவாரணி மாத்திரைகள், இரும்புச் சத்து மாத்திரைகள், அலர்ஜிகளுக்கு எதிரான Antihistamine மருந்துகளும் நெஞ்செரிப்பின் தீவிரத்தை அதிகரிக்கும். அதேபோல அதீத எடையுள்ளவர்களின் வயிற்றின் கொழுப்பும், இறுக்கமான ஆடைகளும் இரைப்பையை அழுத்துவதால் அமிலத்தை மேலெழச் செய்து நெஞ்செரிப்பை ஏற்படுத்தலாம்.
மலச்சிக்கல் உள்ளவர்கள் மலத்தை வெளியேற்றுவதற்காக முக்குவதால் மூலநோய் மாத்திரமின்றி நெஞ்செரிவும் ஏற்பட வாய்ப்புண்டு. வயிற்றறையில் இருக்கும் இரைப்பையின் பகுதியாவது அங்கிருந்து இடைமென்தட்டு (Diaphragm) வழியாக நெஞ்சறைக்குள் செல்லக் கூடும். 'ஹையற்றஸ் ஹேர்னியா' எனும் இது வெளிப்படையாக பார்க்க முடியாத ஒரு நோயாகும். இதுவும் நெஞ்செரிப்பை ஏற்படுத்துகிறது.

தொடர்ச்சி 12ம் பக்கம்

CENTURY Travels GmbH

Rheinische Strasse 29
44137 Dortmund

Steeler Strasse 150
45139 Essen

Emirates

Colombo
ab 699 €-799 €

Sommer Special JULI/ AUGUST

Fon: 0231 557 4319 / 0231 5896 557
Mob: 017621682149 Nishanthan

Emirates

Unsere Services
Mietwagen/ Versicherung/Pauschalreisen/Hotels/ Visum Service/Flughafen Abholung
Email: info@centurytravels.de

25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்



# இணுவையூர் ஒன்றியம் மூன்றாம் ஆண்டு கலைமாலை நிகழ்வு

இணுவையூர் ஒன்றியம் மூன்றாம் ஆண்டு கலைமாலை நிகழ்வானது வெகு விமரிசயாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வின்போது பிரதம விருந்தினராக இலங்கையில் இருந்து வருகைதந்த தமிழ்த்துறைப் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் (பேராதனைப் பல்கலைக்கழகம்) அவர்களும், டென்மார்க், சுவிஸ், அவுஸ்த்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து சிறப்பு விருந்தினர்களும் கலந்து சிறப்பித்தார்கள். தமிழ் மொழி பாதுகாத்தல், ஆரோக்கிய வாழ்வு, இளைய சமுதாயம் இளமை நோன்பு காத்து இனிய நெடிய வாழ்க்கை வாழ்வதற்கு உரிய வளிமுறைகள், இணுவையூரின் வரலாறு ஆவணப் படுத்தப்பட வேண்டும் என பல விடயங்கள் முன்வைக்கப் பட்டது. கலைக்கொத்த மண்ணாம் இணுவையின் பொன்வாழ் கலைஞர்களின் கலை நிகழ்வுகள், தனி வாத்திய விருந்து,பழம்பெரும் கலையாம் வசந்தன் கூத்து விழாவிற்கு மெருகூட்டியது. கலைஞர்களுக்கும் விருந்தினர்களுக்கும் கௌரவ வைபவமும் நடைபெற்றது



# சுவிஸில் சண் தவராஜாவின் நூல் வெளியீடு

மட்டக்களப்பை சேர்ந்தவரும்,சுவிஸில் வசிப்பவரும்,நிலவரம் பத்திரிகையின் ஆசிரியரும்,ஜெர்மனி அகரம் சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினரும், தமிழ் மக்கள் பேரவை உறுப்பினரும்,கதிரவன் உலா ஒளிபரப்பின் உதவி நிறுவனரும், ஊடகவியலாளருமான திரு.சண் தவராஜா அவர்கள் வரைந்த ழூதமிழ்மக்களின் விடுதலைப்பயணத்தில் ஊடகர்களின் பங்குழூ எனும் கட்டுரை தொகுப்பு நூல் கடந்த 22.04.2018 சுவிஸ் பேர்ண் மாநிலத்தில் மண்டபம் நிறைந்திட்ட மக்கள் குழுமியிருக்க குறித்த நேரத்தில் கொத்துவிளக்கேற்றலுடன்,வித்தகன் சுரேஸ் தொகுத்து வழங்க, எழுத்தாளர் கல்லாறு சதீஸின் தலைமையில் சிறப்புற வெளியீடு செய்யப்பட்டது.

25 கட்டுரைகளை தாங்கிய இந்நூலுக்கான விமர்சனவுரையை பிரான்சிலிருந்து எழுத்தாளன் பாலகணேசனும்,விசேட விருந்தினராக இலங்கையிலிருந்து எழுத்தாளர் மது பாரதி அவர்களும்,சிறப்பு விருந்தினராக இலண்டனிலிருந்து ஊடகவியலாளர் தயானந்த அவர்களும் கலந்து சிறப்பித்தனர். திரு.தயானந்தா நூலை மையமாகவும், ஊடகர்களையும் உள்

வாங்கி ஆற்றிய உரை சிறப்பாக இருந்தது. திருமதி மது பாரதி இளைஞர் கல்வி,புலத்து தமிழர்களின் இயங்கு நிலை,ஒரு பிள்ளை பல மொழிகளை உள்வாங்கும் திறன் பற்றி எடுத்துரைத்தார். விசேட பேச்சாளர்களாக எழுத்தாளர் ஆதிலட்சுமி,ஜெர்மனி அகரம் சஞ்சிகை ஆசிரியர் திரு.இரவி மாஸ்டர், லொசான் மாநகரசபை உறுப்பினர் திரு.நவசிவாயம், ஊடக வியலாளர் திரு.கனகரவியும்,வாழ்த்துரையாக பொலிகை ஜெயா, இன்னும் பலரும் கருத்துரை கொண்டனர். திருமதி. சிவரஞ்சனி,கங்கை மகன் ஸ்ரீ ஆகியோர் பா மாலை பொழிந்தனர்.

பலர் ஆசிரியருக்கு பொன்னாடை போர்த்தி மேன்மைப்படுத்தினர்.பரத நாட்டியம்,சிறுவர் நடனம்,எழுச்சி பாடல்கள் விழாவை மெருகூட்டின. ஈற்றில் ஆசிரியர் சண் தவராசா தனதுஆசிரியருரையில் ஊடகர்களின் சிக்கல்கள், பலருக்கு பதிலிறுக்கும் கடப்பாடு,உயிரை கொடுத்த ஊடக வியலாளர்களின் சிறப்புக்கள்,கட்டுரைகளின் உயிரோட்ட நிலைப்பாடு என மிக சுருக்கமாக அழகாக கருத்தாடல் கொண்டார்.

**சுவிஸிலிருந்து பொலிகை ஜெயா.**








25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்



# மனிதனும் அவனின் குண முரன்பாடும்

ஏலையா க.முருகதாசன்

மனிதன் என்பவன் தனது நடத்தையினாலும் குணத்தினாலுமே ஒருவருக்கொருவர் வேறுபடுகிறான்.
ஒரு மனிதனின் நடத்தையைப் பொல இன்னொரு மனிதனின் நடத்தை ஒரு போதும் இருக்காது.இதை துள்ளியமாக கவனித்தால் மட்டுமே அறிய முடியும்.
இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் பொதுப்பார்வைக்கு ஒரேவிதமான நடத்தையுள்ளவர்களாக தோன்றவதாக நினைத்துக் கொண்டு "பார்த்தியா அவர்களை ஒரே மாதிரிக் குணம் அந்த இரண்டு பேருக்கும் ஒரேவிதமான குணம் என்று சொல்லப்படுவர்களைக்கூட உற்றுக் கவனித்தால் அவர்களிடத்தில் ஒத்த குணத்துக்கான ஒற்றமையைவிட ஒத்துப் போகாத குணங்கள் நிறையவே இருக்கும்.
ஒரு மனிதன் தன்னைத்தான் அறிந்து கொள்ளும் வயதிலிருந்து அவன் மூப்பாகி இறக்கும்வரை ஒரே நடத்தையுடனேயோ அல்லது குணத்துடனேயோ இருப்பது சாத்தியமற்றது.
ஆனால்"நானும் ஊரிலையும் பார்த்திருக்கிறன் இஞ்சையும் பார்த்திருக்கிறன் அந்த ஆள் அப்பொழுது இருந்த குணத்தோடைதான் இப்பவும் இருப்பதாகச் சொல்வார்கள்" ஆனால் அது உண்மையல்ல.
அவரின் குணத்தில் நடத்தையில் பல மாற்றங்கள் .நடந்திருக்கும்.ஆனால் அவற்றை நாம் உற்றுக் கனித்திருக்க மாட்டோம்.அதில் எமக்கு அக்கறையும் இருக்காது. ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு சூழ்நிலையில் இப்படி ஒருவரின் நடத்தை பற்றிப் பேசுவோம்.

ஒருவரைப் பற்றிய ஒருவரின் கணிப்பீட்டுக்கும் இன்னும் பலரின் கணிப்பீட்டுக்குமிடையில் பாரிய வேறுபாடு இருக்கும்.ஒருவருக்கு நல்லவராகத் தெரிபவர் இன்னொருவருக்கு"இவனும் ஒரு மனுசனா" எனத் தவறான மனுசனாகத் தெரிவார்.
ஒருவரின் குணங்கள் மற்றவர்களுடனான . தொடர்பாடலில் இந்த குணமுரண்பாடுகளை உற்று அவதானித்தால் அறிந்து கொள்ள முடியும்.
ஒருவர் தன் வாழ்நாளில் பல்வேறுபட்ட மனநிலைகளைக் கொண்டவராக இருப்பார்.
ஒருவன் குடும்பஸ்தனாக இருக்கும் போதே தனது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் நடந்து கொள்ளும் குணவியல்பில் அவன் ஒருநாள் போல இன்னொரு நாள் இருக்க மாட்டான்.இதில் குடும்பத்தில் உள்ளவர்களும் விதிவிலக்கல்ல.
ஒருவருக்கு சாந்தசொரூபியாக இருக்கிறவன் இன்னொருவனுக்கு கோபக்காரனாக காட்சியளிக்கிறான்.அடக்கமாக நடந்து கொள்ளுகின்ற அதே மனிதன் சில வேளைகளில் அதிகப்பிரசங்கியாக நடந்து கொள்ளுகிறான்.
ஒரு நிலையான குணத்தையுடையவன்தான் மனிதனென்றால் எல்லாச்சூழ் நிலையிலும் அவன் குணம் மாறாமலே இருக்க வேண்டுமே, ஆனால் மனிதனின் குணம் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்றவாறு மாறவேடி செய்கின்றது.
உதாரணமாக நேற்றுச் சந்திக்கும் ஒருவரின் நடத்தையை அவருடனான தொடர்பாடல் உரையை இன்று எதிர்பார்க்கவே முடியாது.
தெளிவாக மனதை நிலைநிறுத்தி சிந்திக்கும் போது ஒரு மனிதனுக்குள் பல மனிதர்கள் இருப்பது போலத் தோன்றும்.பல்வேறுபட்ட குணங்களின் தொகுப்பாக இருக்கும் மனிதன் சில சந்தர்ப்பங்களில் வேறொரு மனிதனாக தோற்றப்படுவான்.இது அவனுக்கே ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

வேறொரு மனிதனின் குணம் தனக்குள் விஸ்வரூபமெடுத்துள்ளதை அவன் உணருவான். இதுகூட அவனுள் நிலைத்து நிற்காது. குணங்களின் கலவையாக இருக்கும் மனிதனின் குணங்கள் நேரத்திற்கொரு வடிவத்தைப் பெற்று நிற்பதை தவிர்க்கவே முடியாது.
பல ஆண்டுகளாக ஒருவரின் குணத்தை அவரின் நடத்தையை கவனித்து வரும் ஒருவர் அவன் ஒரே மாதிரியாக இருப்பதாகவே அவரின் பொதுப்பார்வைக்கு தெரியும்.ஆனால் அவரின் தினசரி நடவடிக்கைகளை தன்னுடன் பழகிய விதத்தை ஒரு நாட்குறிப்பு போல அவனின் வாழ்க்கையை எழுதி வருவோமானால் அந்த மனிதனின் குணு முரண்பாடுகள் மிகத் தெளிவாகவே தெரியும்.
எனவே ஒருவனிடம் தோன்றுகின்ற எண்ணங்கள் அவனுடைய நடத்தையை குணத்தை தீர்மானிப்பது போல, அவன் சந்திக்கும் சூழ்நிலைகள் அவனின் குணத்தில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.



# யேர்மனி குறும் செய்திகள்

வ.சிவராசா யேர்மனி..

## சைவ உணவை விரும்பும் யேர்மனியர்

நாம் உண்ணும் உணவுகளில் சைவ உணவுகள்தான் நமது உடலாரோக்கியத்திற்குச் சிறந்தது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக் கின்றனர். உலகிலேயே சைவ உணவை உண்பவர்கள் பட்டியலில் இந்தியாதான்: முதலிடம் வகிக்கின்றது.

யேர்மனியிலுள்ள சுமார் 82 மில்லியன் சனத்தொகையில் சுமார் 5.7 மில்லியன்பேர் சைவர்களாம். மாமிச உணவுகளால் செலவும் அதிகம் உடலாரோக்கியமும் கெட்டு விரைவில் ஆயுள் முடிந்துவிடும் எனவே நாம் சைவ உணவுகளை உண்ணும் பழக்கத்துக்குப் படிப்படியாக மாறவேண்டும்.

யேர்மனியர் ஒருவருக்கு தற்போதுள்ள விலைவிபரப்படி மாதம் 29 யூரோ சைவ உணவுக்கான மரக்கறிச்செலவு ஏற்படுவதாக யேர்மனிய வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

## உடற்பருமன்!

உலகில் எத்தனையோ நாடுகளில் தினமும் பல்லாயிரம் பேர் உணவில்லாமலும் போசாக்கு இல்லாமலும் வறுமையிலும் செத்து மடிகின்றனர். ஆனால் பல செல்வந்த நாடுகளில் அளவுக்கு அதிகமாக உண்டு கொழுத்து உடற்பருமன் கூடியவர்களின் பிரச்சனை பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

யேர்மனியிலும் 82 மில்லியன் மக்கள் தொகையில் 66 வீதமான ஆண்களும் 51 வீதமான பெண்களும் அளவுக்கு அதிக உடற்பருமன் கூடியவர்களாகக் காணப்படுகிறார்களாம். இவர்களைவிட யேர்மனிய குழந்தைகள், சிறுவர்களும் 15 வீதமானோர் நிறைகூடியவர்களாகக் காணப்படுகிறார்கள் என சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இதனால் அரசுக்கு மேலதிகமாக மருத்துவச் செலவுகளும் வேறு பல செலவுகளும் ஏற்படுகின்றன. ஆகவே நாம் அளவோடு உண்டு நீண்டகாலம் வாழ்வோம்...





09 ம் பக்கத் தொடர்ச்சி

# நெஞ்சரிப்பு

உங்களுக்கு மனஅழுத்தமும் இருந்தால்கூட நெஞ்செரிப்பு ஏற்படுத்துகிறது. ஏன் என்று கேட்கிறீர்களா? மனஅழுத்தம் இரைப்பையில் அமிலம் சுரப்பதை அதிகரிக்கிறது.

அத்துடன் இரைப்பையின் செயற்பாட்டை ஆறுதல்படுத்துகிறது (Slow). இவை இரண்டுமே நெஞ்செரிப்பை ஏற்படுத்துகின்றன.

நெஞ்செரிவு பொதுவாக ஆபத்தற்ற அறிகுறியாகும். ஆயினும் கடுமையான சத்தி, உடல் மெலிதல், பசிக்குறைவு, வாந்தியோடு இரத்தம் போதல், மலம் தார்போல கருமையாகப் போதல் போன்ற அறிகுறிகளும் கூட இருந்தால் அலட்சியம் பண்ண வேண்டாம். ஏனெனில் அவை குடற்புண், புற்றுநோய் போன்றவற்றின் வெளிப்பாடாகவும் இருக்கக்கூடும்.

வியர்வை, கடுமையான களைப்பு, மூச்சிளைப்பு ஆகியவற்றுடன் நெஞ்செரிவு வந்து அந்த வலியானது கழுத்து, தாடை, அல்லது கைகளுக்குப் பரவினால் அது மாரடைப்பாக இருக்கலாம் என்பதும் நினைவில் வைத்திருக்க வேண்டிய செய்தியாகும்.

**உங்களுக்கு நெஞ்செரிவு இருந்தால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**

அ.அதிக எடையுள்ளவராயின் உணவு முறை மாற்றங்களாலும், உடற்பயிற்சியாலும் உங்கள் எடையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயலுங்கள். வயிற்றை இறுக்கிப் பிடிக்கும் ஆடைகளை அணிய வேண்டாம். சாப்பிட்டு சில மணிநேரங்கள் செல்லும் வரை குனிந்து வேலை செய்ய வேண்டாம். சாப்பிட்டு இரண்டு மணி நேரமாவது கழிந்த பின்னர்தான் படுக்கைக்குச் செல்ல வேண்டும்.

நெஞ்செரிப்பை ஏற்படுத்தக் கூடிய உணவு வகைகளைத் தவிருங்கள்.

மது, புகையிலை போடுதல், புகைத்தல் ஆகியவற்றை நிறுத்துங்கள்.

மனஅழுத்தத்தைக் குறைக்க வேண்டும்.



நீண்டநாள் இருமல் இருந்தவருக்கும் நெஞ்செரிப்பிற்கும் என்ன தொடர்பு என்று கேட்கிறீர்களா? நெஞ்செரிப்பின்போது இரப்பையிலிருந்து மேலெழும் அமிலமானது சுவாசத் தொகுதியினுள் சிந்திப் பாதிப்பதுண்டு. இது அங்கு அரிப்பை உண்டாக்கி ஆஸ்த்மா, இருமல் போன்றவையை ஏற்படுத்தலாம். அத்தகையவர்களுக்கு சளிக்கான மருந்துடன், அமிலம் சுரப்பதையும், அது மேலெழுவதையும் தடுப்பதற்கான மருந்துகளையும் சேர்த்துக் கொடுத்தால்தான் இருமல் குணமடையும். அதைத்தான் செய்தோம். அவரது எடை அதிகமானதால் அதையும் குறைக்கும்படியும் ஆலோசனை கூறப்பட்டது.




நன்றி .தமிழர் தகவல்-கனடா




25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

Celebrating 25 ஆரம்பம்

## வெள்ளிவிழா ஆரம்ப நிகழ்வு

# வெற்றிமணி விழா!

**16.06.2018 சனிக்கிழமை மாலை: 4.00**

மண்டபம்
Dorfgemeinschafts House
Provinzial str.01
Hückelhoven,Dovern,
Kreis Heinsberg,

1950

1994 - 2018/2019

தாயகத்தில் 1950 ம் ஆண்டு
சிறுவர் மாத இதழாக
ஆரம்பிக்கப்பட்ட வெற்றிமணி

இன்று யேர்மனியில்
25 வது ஆண்டில் தடம் பதிக்கிறது

பிரதம விருந்தினர்
**Dr.நிரோஷன் தில்லைநாதன்**

சிறப்புரை
திரு.தனசேகர் பிரபாகரன் [தமிழ் நாடு]

நடனம்
இன்னிசை
திரை இசை நடனம்
வெற்றிமணி
" அன்றும் இன்றும் "

குறும்படம்

நிகழ்ச்சி தொகுப்பு:
சகநாயகன் சி.சக்திவேல்
செல்வி. லுட்ஷிகா இளங்கோவன்.



பிரவேசம் இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
Vettimaniy: 0163 199 2 333

ஆதரவிற்கு நன்றி:

ஆசியா சமுத்திரம்
Parkhofstr.101
41836 Hückelhoven
02433 903 282

Eur Asian Tours
Further Str.156
41462 Neuss
02131 738783

Koness Fotos
0049 1573 9532 613
www.konessfotos.com/de/

வெற்றிமணி
யாழ்ப்பாணம்


ஆசியா சமுத்திரம்
Sittard Str.21
41061 Monchengladbach
02166 9028 388

AKR Visualizers
Photography and Cinematography
0049 231 5897 7140
0049 162 803 1647

Thushi - Deko
Tel:02305 85945- 0176 608 108 13

Nimal
Video & Photo
0049 152 33 83 29 55 nimalvideo@gmail.com


TKS BEST FOODS
25வது ஆண்டில் கால்பதிக்கும்
தமிழ்த் தாயின் வழிகாட்டி
வெற்றிமணி
மாதாந்த இலவசச் சஞ்சிகைக்கு
TKS Best Foods
ஸ்தாபனத்தின் வாழ்த்துகள்
தேரடி மலிவு விற்பனையில் மட்டுமல்ல....
நாம் என்றும் எப்பொழுதும் உங்களுடன்
TRS
Rabeena
Tilda
Maliban
Maggi
Elephant House
Nestlé
PERFIT
இன்னும் பல நிறுவனத் தயாரிப்புகள்....
மளிகை உலகின்
BIG BOSS
KADHIR
BASMATI RICE
0049 231 950 468 83
0049 231 950 468 82
tksbestfoods
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
Rheinische Str. 79, 44137
Dortmund Germany




இயற்கையை, தான் மட்டுமே இரசிக்கவேண்டும் என்ற எண்ணமில்லதவன் கலைஞன். அதனால் தான் அழகு என்று காண்பதை ஓவியமாகவோ, புகைப்பட மாகவோ ஒளிப்படமாகவோ சிறைப்பிடித்து காலம் காலமாக யாவருக்கும் காட்டி மகிழ்கிறான்.
இந்த மகிழ்ச்சி எனக்கும் அடிக்கடி வருவதுண்டு. அதனால் கமராவுடனே தான் எந்த விடுமுறை என்றாலும் கழிப்பேன். இது இன்று அல்ல அன்று தொட்டு தொடரும் பழக்கம். விடுமுறை என்றால் தனித்துச் செல்லும் பழக்கம் எனக்கு மிக அரிது. இன்று போல் கணவன், தனியாகவும், மனைவி தனியாகவும் விடுமுறைக்கு செல்லும் பழக்கம் குடிகொள்ளாத முதல் தலைமுறை மனிதன் நான்.
முன்பு கொழும்பு செல்வது என்றால் பிற்பொக்ட் கவனம் என்று சொல்லி அனுப்புவார்கள். இப்போ பாங்காக் போவது என்றால் அங்கு பெண்கள் கவனம் என்று சொல்லி அனுப்புவார்கள். கொழும்பில் கொடுக்காவிட்டாலும் பிக் பொக்ற் அடிப்பார்கள், ஆனால் இங்கு ஆண்கள் இடம் கொடுக்காமல் பெண்கள் அடிக்க மாட்டார்கள் என்பது சிறு வேறுபாடு.
பாங்காக்கை விட புக்கெற்றும், பிப்பி அயலன்ட்மற்றும் ஜேம்பொண் அயலண்ட் (அது முன்பு ஜேம்பொண்ட் நடித்த படம் ஒன்று எடுத்த தீவு என்பதால் வந்த பெயர்.)
ஒரு திரைப்படத்திற்கு வேண்டி அழகிய காட்சிகள் கொட்டிக்கிடக்கும் இடம், இத்தீவு. நானும் மனைவியும் ஒருவார விடுமுறையில் சுற்றுலாப்போனோம்.
புக்கெற் அன்று சுனாமியால் அதிகம் பாதிக்கபட்ட இடம். இதனைத்தானோ அழகும் ஆபத்தும் ஒரே இடத்தில் என்றார்கள். அழகிய 5 நட்சத்திர விடுதி, காலை எழுந்ததும் உணவு. சற்று எட்டி நடந்தால் கடல். ஆசைதீர அலைகளுடன் நீந்தி மகிழ்ந்தோம்.

தனியாகவும், சோடியாகவும் பல நாடுகளிலும் இருந்து வந்திருந்தார்கள். கொட்டலில் எமது அறைக்கு நேரே தாய்லாந்து பெண் ஒருத்தி நேரத்திற்கு நேரம் ஆடை மாற்றிக்கொண்டு தலையில் ஒரு பூவுடன் சுற்றிவருவாள். அந்த பூவைச் சுற்றி ஒரு வண்டு! ஒரே வண்டு!! தினம் மொய்த்தவண்ணமே இருக்கும்.
அவர்கள் கைகள் கோர்த்தவண்ணம் திரிவார்கள். சற்று Zoom சூம்பண்ணிக் கவனித்தால் அவன்தான் அவளைப் பிடித்திருப்பான். அவள் அந்தப்பிடியில் எந்தவித உணர்வும் கொண்டவளாகத் தெரியவில்லை. அவள் காதலன் வயது ஒரு முப்பது வயது மட்டுமே அவளை விட அதிகமாக இருக்கலாம்.

தினமும் எதாவது ஒரு இடத்திற்கு கொட்டல் வான் தனியாவும், குழுவாகவும் எம்மை அழைத்தச் செல்வார்கள். நாம் தனியாச் செல்வதே வழக்கம். ஆனால் பிப் அயலன்ட் தீவிற்கு கப்பலில் செல்லவேண்டும் என்பதால் குழுவாகச் சென்றோம்.
அழகா நான்கு அடுக்குகள் கொண்ட பெரிய கப்பல். அது நீரைக் கிழித்துக்கொண்டு புறப்பட்டது. எனக்கு படம் எடுக்வேண்டும், எனவே மேல் அடுக்கில் இருந்தால் சுலபம் என்று மேல் அடுக்கு இருப்புக்குச் சென்று அமர்ந்து கொண்டேன்.
என் மனைவிக்கு ஒரு குணம், வெயில் என்றால் தலை எரியுது என்பா, குளிர் என்றால் விறைக்குது என்பா. இயற்கையை என்ன றீமோட் மூலம் பட்டுப்படுத்த முடியுமா. சற்று நேரத்தில் நீங்கள் படத்தை எடுங்கோ தான் கீழ்தட்டில் இருக்கிறேன் என்று புறப்பட்டுவிட்டா.

நான் தனியாக நின்று படம் எடுத்துக் கொண்டு நின்றேன். பலர் செல்பி எடுத்தார்கள். ஒரு சிலருக்கு செல்பியில் திருப்பி இல்லை. தங்களை ஒரு முறை எடுத்துவிடும்படி கூறியதால் எடுத்துவிட்டேன். அவர்களும் பார்த்து விட்டு அட வடிவாக இருக்கிறது என்று அவரவர் தங்கள் மொழியில் கூறுவார்கள். மகிழ்ச்யைக் காட்ட ஏது மொழி. அது தானாகப் புரியும்.
அவர்களுடைய மகிழ்ச்சி மேல்தளத்தில் ஒருவருக்கொருவர் பரவி என்னை ஒரு படப்பிடிப்பாளராக மாற்றிவிட்டார்கள். என்னைப் படம் எடுக்க விடுகிறார்கள் இல்லையே என்று வெளியே சற்று சினந்து கொண்டாலும், அவர்கள் என்படப்பிடிப்பிற்கு தந்த சின்னச் சின்ன அங்கீகாரம் அபாரமகிழ்ச்சியை தந்தது.
நடுக்கடலில் இரு மலைகள். ஒன்றை ஒன்று தழுவியதுபோல் இருந்தது. ஆனால் அது ஒரு கோணத்தில் பார்த்தால் மட்டுமே அப்படித் தெரியும்.
நான் அந்தக்கோணத்தில் அந்த மலைகளில் ஒரு ஆணையும் பெண்ணையும் தேடிக்கொண்டு நின்றபோது. மிக மிக அருகில் ஆணும் பெண்ணும் தெரிந்தது. அவளது நீண்ட தலைமயிர் என்கமராவை கடல் காற்றின் துணையோடு சுற்றிக்கொண்டது.

அவள் இடைக்குமேல் வலைபோட்டு பிடித்த மீன்போல் உடல் வலையால் பின்னபட்டு இருந்தது. பின்னலில் இடைவெளியைப் பார்க்கும்போது இது தானக விரும்பி வலையில் வீழ்ந்த மீன்போலவும் இருந்தது.

அட அவள் வேறுயாருமல்ல கோட்டலில் நம் முன்னறை மொடல்தான். ஆம் நான் முன்பு சொன்ன அந்த காதல் சோடிகள் தான் அவர்கள்.

தங்களுடைய கமராவைத் தந்து தங்கள் இருவரையும் படம் எடுத்துவிடும்படி சொன்னான். சரி எனக்கு கப்பல் போகும் வேகத்தில் நான் கண்வைத்த அந்த மலைபோய்விடும் என்ற ஏக்கம். அவர்களுக்கு மலைபற்றிய மலைப்பே இல்லை. அடிக்கடி கட்டிப்பிடிப்பதும். கொழும்பில் வாகன நெரிச்சலான நேரங்களில் ஒன்றை ஒன்று முட்டுவதுபோல், அவர்களது இதழ்களும் அடிக்கடி நெரிச்சலைப்பயன்படுத்தி முட்ட முயன்றன. ஏனோ ஒரு இதழ் தகராறு பண்ணியவண்ணமே இருந்தது. இந்த தகராறை முன்பு கோட்டல் வளாகத்திலும் பலதடவை கண்டு இருக்கிறேன். நாம் அதனைத்தான் ஊடல் என்று சொல்கிறோமே. என விட்டுவிட்டேன்.
இப்போது அவர்கள் என்பதிலுக்காக காத்திருந்தாலும் தங்களது வேலைத் திட்டத்தில் மிகவும் உறுதியாக இருந்தார்கள். கமராவை எனக்கு நீட்டியபடியே ஒருவாறு முத்தமிட்டு விட்டான். முத்தமிட்டதை நான் கண்டேன் ஆனால் அவள் உணாந்ததாகத் தெரியவில்லை.

நான் சற்று சத்தமாகவே சொன்னேன் 5 நிமிடம் பொறுங்கள் அந்த மலைபோனதும் எடுத்து விடுகிறேன் என்று. அவனுக்கு மலை என்ன? மடுவென்ன. ஓக்கே ! நாம் முன்னே போய் நிற்கிறோம் வாருங்கள் என்றான்.

தொடர்ச்சி 19ம் பக்கம்




மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம்
( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம்
(Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில்
A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen





# தகவல் அறிவியல்

## சுயதொழில் புரிபவர்கள் கட்டாயம் அறியவேண்டியது!

சேவியர்.

பாய்ஸ் திரைப்படத்தில் ஒரு காட்சி வரும். நகைச்சுவைக்காக வைக்கப்பட்ட அந்தக் காட்சியில் தகவல் அறிவியலின் தேவையை மிக எளிமையாக விளக்கியிருப்பார் சுஜாதா.

செந்தில் ஒரு கோயில் மண்டபத்தில் உட்கார்ந்திருப்பார். அவரது கையில் ஒரு குட்டி புக் இருக்கும்.




## செந்திலால் முடிந்தது உங்களால் முடியாதா என்ன?

அதில் நாள், கிழமை வாரியாக எந்தக் கோயிலில் எப்போது என்ன சாப்பாடு போடுவார்கள் எனும் குறிப்புகள் எழுதப்பட்டிருக்கும். அதை வைத்துக் கொண்டு ஹாயாக சாப்பிட்டு காலத்தை ஓட்டுவார் அவர். அவரிடம் வந்து கேட்பவர்களுக்கும் புக்கைப் புரட்டிப் பார்த்து, "இந்த கோயிலுக்கு இத்தனை மணிக்கு போ.. ஓட்டை போட்ட வடை தருவாங்க" என அனுப்பியும் வைப்பார்.

தகவல்களை வைத்துக் கொண்டு "இன்.ஃ.பர்மேஷன் ஈஸ் வெல்த்" என அவர் சொல்லும் டயலாக் பிரபலமானது !

தகவல்களை சேமித்து வைத்து, அதைப் பயன்படுத்த வேண்டிய வகையில் பயன்படுத்துவது ரொம்பவே பயனளிக்கும் என்பதை சுஜாதா இந்த குட்டி காட்சியின் மூலம் இயல்பாக விளக்கியிருப்பார்.

இந்த சின்ன சிந்தனையை, பரந்து பட்ட தொழில்நுட்ப வெளியில் ஆழமாகவும், நீளமாகவும், பெரிய அளவிலும் அலசி ஆராய்ந்தால் அதை தகவல் அறிவியல் என்று சொல்லலாம்.

உதாரணம் ஒன்று சொல்கிறேன். ஒரு நிறுவனம் இருக்கிறது. அதன் மேலதிகாரி தன்னுடைய அக்கவுன்டிங் துறையைக் கூப்பிட்டு, "நம்ம கம்பெனில போன வருஷம் நடந்த செலவுகளோட ஒட்டு மொத்த டேட்டாவையும் கொண்டு வாங்க" என சொல்கிறார் என வைத்துக் கொள்வோம். ஊழியர்கள் உடனே போய் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை நடந்த செலவுகளின் பட்டியலை எடுப்பார்கள். சின்னச் சின்ன செலவு முதல், பெரிய பெரிய இன்வெஸ்ட்மென்ட் செலவுகள் வரை அனைத்தையும் கொண்டு வந்து மேலதிகாரியிடம் கொடுப்பார்கள். இது தான் டேட்டா ! தகவல் !

இந்தத் தகவலை அப்படியே வைத்திருப்பதில் எந்த பயனும் இல்லை. செயல்படாத தகவல் செத்த தகவல் என சொல்லலாம். அது வெறுமனே இடத்தை அடைத்துக் கொண்டு கிடக்கும் அவ்வளவு தான். ஆனால் மேலதிகாரி அத்துடன் நின்று விடுவதில்லை. மீண்டும் அவர்களைக் கூப்பிட்டு, "என்னப்பா இப்படி கொண்டு வந்தா நான் என்ன பண்றது ? ஒவ்வொரு மாசம் எவ்வளவு செலவாச்சு ? என்ன டிப்பார்ட்மென்ட்க்கு எவ்ளோ செலவாச்சு ? சம்பளம் எவ்ளோ குடுத்திருக்கோம் ? முதலீடு எவ்ளோ செஞ்சிருக்கோம் ? இப்படி பிரிச்சு குடுப்பா" என்பார்.

ஊழியர்கள் போய் அந்த தகவல்களையெல்லாம் திருப்பிப் போட்டு, அலசி அதை முறைப்படுத்தி மேலதிகாரி கேட்ட வடிவத்தில் கொண்டு வந்து கொடுப்பார்கள். இது தான் கட்டமைக்கப்பட்ட அல்லது வகைப்படுத்தப்பட்ட தகவல். ஸ்ட்ரக்சர்ட் டேட்டா !

இப்போது அந்தத் தகவல்களைப் புரட்டிப் பார்க்கும் மேலதிகாரி ஊழியர்களை அழைத்து,

"யப்பா... மார்ச் மாசம் ஏகப்பட்ட செலவாகியிருக்கு ! சேல்ஸ் டீம்ல செலவு அக்டோபர் மாசம் எகிறியிருக்கு ! மாசா மாசம் பெட்ரோல் செலவு ராக்கெட் மாதிரி ஏறியிருக்கு.." என்னன்னு கொஞ்சம் பாத்து சொல்லு" என்பார்.

அப்போது ஊழியர்கள் அந்த தகவலை மேலும் அலசி ஆராய்ந்து அதற்குரிய பதிலோடு வருவார்கள். அக்டோபர் மாதம் போனஸ் என்றோ, மார்ச் மாதம் அட்வான்ஸ் பேய்மென்ட் என்றோ தங்கள் கண்டுபிடிப்பைச் சொல்வார்கள். இது தகவல் அலசல் ! டேட்டா அனாலிசிஸ் !


இப்போது மேலதிகாரி தன்னுடைய திட்டமிடல் குழுவை கூப்பிடுவார். கூப்பிட்டு தன்னிடம் இருக்கின்ற இந்த தகவல்களை எல்லாம் கொடுப்பார். "இதோ பாருங்க, இதான் கடந்த வருஷத்தோட செலவு. இதுல எல்லா விவரங்களும் இருக்கு. அடுத்த வருஷம் இந்த செலவில 10 சதவீதம் கம்மி ஆகணும். எல்லா மாசமும் செலவு கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கணும், அதுக்கு என்ன பண்ணணுமோ அதை கண்டுபிடிச்சு சொல்லுங்க" என்பார். இப்போது திட்டக் குழுவினர், கடந்த ஆண்டின் தகவலை வைத்துக் கொண்டு எதிர்காலத்தை திட்டமிடுவார்கள். எதிர்காலத்தில் என்னென்ன செய்தால் மேலதிகாரி சொன்னதை நிறைவேற்றலாம் என்பதை முடிவுசெய்வார்கள். இது தான் டேட்டா அனாலிடிக்ஸ். பொதுவாகச் சொல்ல வேண்டுமெனில் டேட்டா சயின்ஸ். தகவல் அறிவியல்.

தொடர்ச்சி 17ம் பக்கம்

Chilli Mixx Catering

உங்கள் மங்கலகர வைபவங்கள் சுவைபெற எம்மை அழையுங்கள்!

திருமண விழாக்கள்
பூப்புனித நீராட்டு வைபவங்கள்
பிறந்த நாள் கொண்டாட்டங்கள்
ஒன்றுகூடல்கள் எதுவானாலும்
அறுசுவை படைக்க அழையுங்கள்



+49 176 41842298 +49 176 21303158

25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

## தகவல் அறிவியல்

தொடர்ச்சி 15 ம் பக்கம்



துவக்கத்தில் ஏனோதானோவென கிடந்த தகவல்கள், ஒன்று சேர்க்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு, தரம்பிரிக்கப்பட்டு, பயன்படுத்தக்கூடிய வகையில் மாற்றப்பட்டு, எதிர்காலத்துக்கான முடிவுகளை நிர்ணயிக்கும் காரணியாக உருமாற்றம் அடைகிறது. இது தான் தகவல் அறிவியல் என்பதன் ஆகச் சுருக்கமான விளக்கம்.
இந்த தகவல்களெல்லாம் நாம் நினைப்பது போல அழகாக கணினியில் டைப் செய்து சேமிக்கப்பட்டிருப்பவை மட்டுமல்ல. பல்வேறு விதமான தகவல்கள், பல்வேறு விதமான வடிவங்களில் கிடைக்கின்றன. கணினியிலோ, காகிதத்திலோ நாம் தெளிவாக எழுதி வைத்திருக்கும் தகவல்கள் முறைப்படுத்தப்பட்ட தகவல்கள். அல்லது ஸ்ட்ரக்சர்ட் டேட்டா. இதைக் கையாள்வது எளிது. இந்த தகவல்களை அலசி ஆராய்வதும், அதன் மூலமாக புதிய முடிவுகளை எடுப்பதும் மிக எளிது.

ஆனால் முறைப்படுத்தப்படாத தகவல்கள் விஷயத்தில் அது கடினம். அதென்ன முறைப்படுத்தப்படாத தகவல் ? அலுவலகத்தில் ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்கள் இருக்கும். அந்த கேமராக்கள் 24 மணி நேரமும் கண்சிமிட்டி காட்சிகளைப் பதிவு செய்து கொண்டே இருக்கும். கார் பார்க்கிங்கிலும், அலுவலகத்தைச் சுற்றியும் இதே போல பல கேமராக்கள் சுற்றிச் சுற்றி காட்சிகளை தனக்குள் அடுக்கிக் கொண்டே இருக்கும் ! இந்த வீடியோ காட்சிகள் முறைப்படுத்தப்படாத தகவலின் ஒரு உதாரணம் !

அலுவலகத்தில் தலைமை அதிகாரி ஒருமணி நேர உற்சாக உரையாற்றுகிறார் என வைத்துக் கொள்வோம். அதில் பல விஷயங்கள் இருக்கும். பல திட்டங்களின் துவக்க நாட்கள் இருக்கும். அந்த உரை ஒரு கட்டமைக்கப்படாத தகவல். அதிலிருந்து தேவையான தகவல்களை பிரித்தெடுக்க வேண்டும்.

ஒரு அலுவலகத்தை எடுத்துக் கொண்டால் இத்தகைய தகவல்கள் எக்கச்சக்கமாக குவிந்து கிடக்கும். நீண்டு கொண்டே இருக்கின்ற அனுமர் வால் போல அவை பயம் காட்டும். நெருங்கிச் செல்லச் செல்ல விலகி ஓடும் தொடுவானம் போல களைப்பை ஏற்படுத்தும்.
அன்னியன் திரைப்படத்தில் வருகின்ற காட்சி நினைவுக்கு வருகிறதா ? ஐந்து பைசா திருடுவது தவறில்லை. ஆனால் ஐந்து இலட்சம் பேர், ஐந்து ஐந்து பைசாவாக, ஐந்து இலட்சம் தடவை திருடினால் அது மிகப்பெரிய திருட்டாய் முடியும் இல்லயா ? அதே போல தான் கட்டமைக்கப்படாத தகவல்கள் கொஞ்சம் கொஞ்சமாக சேர்ந்து மலைபோல மாறிவிடும்.
ஆயிரம் பேர் வேலை செய்யும் அலுவலகத்தில், ஒரு நபருக்கு தினம் பத்து அலுவல் சார்ந்த மின்னஞ்சல் வரும் என வைத்துக் கொண்டாலும், மொத்தக்கணக்கு தினசரி பத்தாயிரம் மின்னஞ்சல்கள் என்றாகிறது. அது ஒரு மாதத்திற்கு மூன்று இலட்சம் என மிரட்டும் எண்ணிக்கையில் வந்து முடியும். அப்படி ஒரு ஆயிரம் நிறுவனங்களில் எவ்வளவாகும், தினசரி வருகின்ற




மின்னஞ்சல்களின் எண்ணிக்கை அதிகமானால் என்னவாகும் என்பதையெல்லாம் மனக்கணக்கு போட்டு பார்த்துக் கொள்ளுங்கள்.
இதே போல புகைப்படங்கள், டாக்குமென்ட்கள், ஆடியோ ஃபைல்கள், டெக்ஸ் ஃபைல்கள், பிரசன்டேஷன்கள், வலைத்தளங்கள், போன் கால்கள் என ஒவ்வொரு விஷயத்தையும் எடுத்துக் கொண்டால் "ஒரு நிமிஷம் தலை சுத்திடுச்சு" என்று நம்மையறியாமலேயே சொல்வோம்.

நமக்குக் கிடைக்கின்ற தகவல்களில் 70 முதல் 90 விழுக்காடு தகவல்களும் கட்டமைக்கப்படாத தகவல்கள் தான் ! அப்படிக் கிடைக்கின்ற தகவல்களை கட்டமைக்கப்பட்ட தகவல்களாக மாற்றுவது எப்படி என்பது தான் தொழில்நுட்பம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால். அதற்கான தொழில்நுட்ப நுணுக்கங்களை தகவல் அறிவியல் தன்னகத்தே முக்கிய இடத்தில் வைத்திருக்கிறது.




அலுவலகம் எனும் எல்லையைத் தாண்டினால் சமூக வலைத்தளங்கள், வாட்சப் போன்ற குறுஞ்செய்தி செயலிகள், வலைத்தளங்கள், வீடியோ கால்கள், மின்னஞ்சல்கள், ஆன்லைன் பரிவர்த்தனைகள், சிக்னல் வீடியோக்கள் என இந்த தகவல்களின் வகைகளும், அளவுகளும் கோடி கைகளுடன் மனுக்குலத்தை இறுக்கப் பிடிக்கின்றன !
இந்த சவாலை, சாதகமாய் மாற்றும் வேலையைத் தான் தகவல் அறிவியல் செய்கிறது. இன்றைய தேதியில் வேலை வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கும் இடம் "டேட்டா சயின்ஸ்" எனும் தகவல் அறிவியல் தான்.

**அறிவியல் தொடரும்**












as products are available in Star impex

எமது நிறுவனத்தில் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**Star Impex**

Asia & Afro Großhandel / Einzelhandel

Kipper Str.03 44147 Dortmund Germany

Tel: 0231 860 26 96

e.mail:star-impex@live.de

25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# அதிசய உலகம்

## ஏன் மலைப்பிரதேசத்தில் குளிர் அதிகமாக இருக்கிறது?



Dr.நிரோஷனின்

நண்பர்களே உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். அது என்னவென்றால், நெருப்பை எடுத்துக்கொள்வோம். அந்த நெருப்பில் அருகே நமது விரலைக் கொண்டு சென்றால் என்ன நடக்கும்? எங்களால் அதன் வெப்பத்தை உணர முடிகின்றது, சரி தானே? இதுவே அந்த நெருப்பில் இருந்து நமது விரலைக் கொஞ்சம் கொஞ்சமாக விலத்தும் போது, வெப்பம் குறைந்துகொண்டு போகின்றது என்பதை உணர்வோம். சரி, இது மிகவும் இலகுவான இயற்பியல் ரீதியான சிந்தனை ஆகும். ஆனால் ஒரு விஷயத்தைக் கவனித்து இருக்கின்றீர்களா? சூரியனும் ஒரு விதமான பெரும் நெருப்பு தானே? நாங்கள் மலைப்பிரதேசத்தில், அதாவது சூரியனுக்குக் கொஞ்சம் அண்மையில் இருக்கும் போது, நமக்குக் குளிராக இருக்கும், ஆனால் மலைப்பிரதேசத்தை விட்டுக் கீழ் நோக்கிச் செல்லும்போது, அதாவது சூரியனை விட்டு விலகும் போது, வெப்பம் அதிகரிக்கின்றதே? அது எப்படி?ஆரம்பத்தில் நான் நெருப்பை வைத்துச் சொன்ன உதாரணம் போல், நாம் மலைப் பிரதேசத்தில் மேல் நோக்கிப் போகும் போது வெப்பம் அதிகமாகவும், கீழ் நோக்கிச் செல்லும் போது வெப்பம் குறைவாகவும் தானே இருக்க வேண்டும்? ஆனால் ஏன் அப்படி இருப்பதில்லை? இதற்குக் காரணத்தை நான் அறியத்தர முன்பு, முதலில் வெப்பநிலை என்றால் என்ன என்பதைப் பார்ப்போம்.

நம்மைச் சுற்றி இருக்கும் காற்று எண்ணற்ற துகள்களைக் கொண்டது. இலகுவாகச் சொல்லப்போனால் இந்தத் துகள்கள் அசைந்து ஒன்றுடன் ஒன்று உரசி மோதுவதால் தான் வெப்பம் ஏற்படுகின்றது. எனவே இந்தத் துகள்கள் ஒன்றுடன் ஒன்று உரசுவதன் வேகம், அதிகரிக்கும் போது வெப்பநிலையும் அதிகரிக்கின்றது. இதில் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், காற்றின் அழுத்தத்தைப் பொறுத்து இந்தத் துகள்களின் வேகம் அதிகரிக்கின்றது. அழுத்தம் அதிகரித்தால் துகள்களின் வேகமும் அதிகரித்து, அத்துடன் வெப்பநிலையும் அதிகரிக்கின்றது. காற்றின் அழுத்தம் குறையும் போது, துகள்களின் வேகம் குறைந்து வெப்பநிலையும் குறைகின்றது.

சரி, இது இப்பொழுது உங்களுக்கு நன்றாகவே புரிந்து இருக்கும், எனவே மலைப் பிரதேசத்தில் ஏன் வெப்பநிலை குறைவாக இருக்கின்றது என்பதும் நன்றாகவே புரியும் அல்லவா? அதற்குக் காரணம் நாம் மலை ஒன்றில் ஏறி மேலே செல்லச் செல்ல காற்றின் அழுத்தமும் குறைந்துகொண்டே போகின்றது. காற்றின் அழுத்தம் குறைந்தால், துகள்களின் வேகமும் குறைந்து விடும். எனவே துகள்களின் வேகம் குறைந்தால், வெப்பநிலையும் தானாகக் குறைந்துகொண்டே போகும். ஆனால், இதுவே மலையில் இருந்து கீழ்நோக்கிச் செல்லும் போது மறுபடியும் காற்றின் அழுத்தம் அதிகரித்து, துகள்களின் வேகமும் அதிகரித்து அத்துடன் வெப்பநிலையும் அதிகரிக்கின்றது.

எனவே மலை பிரதேசத்தில் வெப்பநிலை குறைவாக இருப்பதற்குச் சூரியன் காரணம் இல்லை. அங்கே காற்றின் அழுத்தம் குறைவாக இருப்பது தான் காரணமாக இருக்கின்றது. எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com /scinirosh) அறியத் தாருங்கள்!

15ம் பக்கத் தொடர்ச்சி

## கொஞ்ச நேரம்

சுற்று நேரத்தில் முன்பக்கம் சென்றேன். கப்பலின் முன் கூர்ப்பகுதி நீரை கிழித்துக்கொண்டு பாய்ந்தது. அதனையும் அவர்கள் இருவரையும் ஒரு சட்டத்திற்குள் படமாக்கி கொடுத்தேன்.

அதனைப்பார்த்த அவள் தன்னை ஒருபடம் எடுத்துவிடும்படி தனது கமராவை என்னிடம் தந்தாள். தன்னை தனியாக எடுக்கும்படி. நான் அவளை எடுப்பதற்காக ஓடும் கப்பலில் பின்படலம் அழகாக வரும் வரை காத்திருந்தேன். அவனோ விடுவதாக இல்லை தானும் படத்தில் வரவேண்டும் என அவளை அடம்பிடித்துக்கொண்டு நின்றான்.

ஆழகிய கூந்தல் தாய்லாந்து நாட்டின் கலாச்சரத்தை காட்டும் பூக்கள் தலையில். மொத்தத்தில் ஒரு மணமகள் போல் தெரிந்தாள். நான்கு படம் படக்படக் என்ற கிளிக் செய்தேன்.

என் ஆவலைப் புரிந்துகொண்டவன். அவளிடம் எனக்கும் ஒரு போஸ் கொடுக்கவும் அவர் எடுப்பாரர் என்றார்.. அவள் சற்றும் தயங்காமல் இடுபை நெளித்து மார்பை நிமிர்த்தி. சும்மாயிருந்த மயில் சிறகு விரிப்பது போல் முடிந்தவரை தன்னை அழகை விரித்தாள்.

சற்று நேரத்தில் அவள் மாயமாக உள்ளே மறைய. அவளையே சுற்றிய வண்டு என்னிடம் வந்தது.

நான் எனது மின் அஞ்சல் தருகிறேன் அந்தப்படத்தை எனக்கு அனுப்பவிடும்படி சொன்னான். நான் ஒப்புக்கு வேண்டிக்கொண்டேன்.

என்னை அவதானித்ததாகவும். அழகு இரசனை அதிகம் எனக்கு உள்ளதாகவும் தன் கணிப்பை கூறினான். தான் மலேசியாவில் இருந்து வந்துள்ளேன் என்றவர் சட்டென நீங்கள் தனியாகவா வந்ததீர்கள் எனக் கேட்டான். இல்லை நான் மனைவியுடன் என்றேன்.

சத்தம் வராமலே ஏதோ வாய்க்குள் பேசுவது தெரிந்தது. அதனை எப்படி என்றாலும் வைத்துக் கொள்ளுங்கள்.

சிரித்துக்கொண்டே சொன்னார் தான் இங்கு வந்துதான் இந்த பெண்ணை சந்தித்தேன். சுப்பர் என்று வாயை உறிஞ்சினார். எதனைச் சொன்னார் என்பது அவரது கண்ணிலும் சொண்டிலும் தெரிந்தது. சரி அதனை விடுங்கள் அதற்கு அடுத்தால் போல் சொன்னார் கொஞ்ச நேரம்போதும் வேண்டும் என்றால் சொல்லவும் என்றார். கோட்டலிலேயே அந்த நேரத்தை நான் தருகிறேன் என்றார். ஏன் மாமாவேலையை பார்க்கிறார் என்று தமிழில் என்றால் உடனடியாக கேட்டுவிடலாம். இது அவனுக்கு புரியும் பாசையில் கேட்டுவிட்டேன். அப்படி என்றால் நீ யார் என்று. அத்தோடு உனக்கு என்னலாபம் என்றேன்.

அவன் சொன்னவாரத்தை எனக்கு தீபாவனி மலிவுவிற்பனையை ஞாபக மூட்டியது. அதாவது ஆறு பேரை கொடுத்தால் அவள் தனக்கு ஒரு முறை இலவசம் என்றான்


உங்கள் தாய் மொழியில்....

HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம்,யோர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: **0172 57 35 454**

**HK Hammacher**
Schleswiger Str .5
**44145 Dortmund**
**0231 81 55 94**
**0173 56 46 651**

MPU ASF FES — இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!







25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
நீங்கள்
IPTV BOX
பாவனையாளரா ?
ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€ 49
மட்டுமே
உங்களிடமுள்ள பழைய BOX களை
எங்களிடம் கையளித்து
விசேட விலைச் சலுகையில்
LYCATV ஐ பெற்றுக் கொள்ளுங்கள்
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
ZEE
தமிழ்
KTV
ஆதவன் HD
JAYA TV
Lyca
Lyca Classic
TENT KOTTA
+
SUN NXT
1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்
4K / HD / 5 .1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்
4000 + MOVIES
35+ HD CHANNELS
LATEST SONGS
NEWS
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
www.lycatv.tv

# யேர்மனியில் அமைந்துள்ள உடல் உலகம்

முனைவர் சுபாஷிணி



## அருங்காட்சியகம், ஹைடெல்பெர்க், யேர்மனி

மனித உடல் ஆச்சரியங்கள் பல நிறைந்த ஒரு அதிசயப் பொருள். தாயின் கருமுட்டையில் தந்தையின் விந்துக் கலப்பு நிகழ்ந்து கருத்தரிக்கும் போது ஒரு குழந்தையின் உருவாக்கம் தொடங்குகின்றது. சிறு அணுவாக உருவாகி படிப்படியாக நரம்புமண்டல வளர்ச்சி, இருதய வளர்ச்சி, உடல் உறுப்புக்கள் வளர்ச்சி எனப்படிப்படியாக வளர்ந்து 10 மாதங்கள் முடிந்து முழு குழந்தையாக தாயின் கருப்பையில் இருந்து குழந்தை வெளிவருவது நிகழ்கின்றது.

தொல்பழங்காலத்தில் பெண்ணின் வயிறு பெரிதாகி பின்னர் ஒரு மனிதக்குழந்தைப் பிறப்பதைப் பார்த்த மனிதர்கள் தம்மைப் போன்ற இன்னொரு விலங்கினை உருவாக்கும் சக்தி படைத்த பெண்ணையே தெய்வமாகச் சிலை வடித்து வழிபடும் வழக்கத்தை உருவாக்கித் தொடர்ந்தனர். உலகின் பல சமுதாயங்களில் மிகப்பழமையான தாய் தெய்வச் சிலைகள் இன்று கண்டுபிடிக்கப்பட்டு அவற்றின் காலம் ஆராயப்பட்டு, அச்சிலைகள் உருவான பகுதிகளில் மக்கள் கொண்டிருந்த பண்பாட்டுக் கூறிகளை ஆராயும் ஆய்வுகள் பல நடந்திருக்கின்றன. இத்தகைய ஆய்வுகள் மனிதன் ஒரு குழந்தை பிறப்பை அவதானித்த தன்மைகளைக் கண்டறியும் வழிகளை ஆய்வுலகத்திற்கு வழங்கியிருக் கின்றன.

இன்று நமக்குக் கிடைக்கின்ற மிகப் பழமையான தாய் தெய்வ சிற்பங்கள் எனும் போது இன்றைய ஆஸ்திரியாவின் வில்லண்டோர்.ஃப் கிராமத்தில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வில் கிட்டிய Venus of Willendorf என்ற தாய் தெய்வத்தைக் குறிப்பிடலாம். இதன் காலம் கி.மு. 28,000லிருந்து 25,000 எனக்கணக்கிடப்பட்டுள்ளது. இதேபோல இன்றைய துருக்கியின் காத்தாலோயுக் (Çatalhöyük) பகுதியில் கண்டெடுக்கப்பட்ட Çatalhöyük எனப்படும் தாய் தெய்வம் கி.மு. 5500லிருந்து 6000 எனக் கண்டறியப் பட்டுள்ளது, இதேபோல சிரியா, ஜெர்மனி, ஐக்கிய அரபு நாடுகள், பண்டைய பெர்சியா போன்ற நாடுகளிலும் இத்தகைய தெய்வ வடிவங்கள் பண்டைய மக்களின் வழிபாட்டில் இருந்தமையைக் காண்கின்றோம்.

மனித உடலை ஆராயும் முயற்சி பன்னெடுங்காலமாக அறிவியல் ஆய்வு நோக்கம் கொண்ட பலரால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. பல்வேறு காலகட்டங்களில் உடல்கூறு ஆய்வுகள் பல்வேறு சமூகங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இன்று மேற்கத்திய ஆய்வுமுறைகள் உல காளவிய அளவில் உடற்கூறு ஆய்வில் துரித வளர்ச்சியை அறிமுகப் படுத்தி செயல்படுத்தியிருப்பதால் மருத்துவத்துறை பன்மடங்கு வேகத்தில் வளர்ந்திருக்கும் சூழலை நாம் காண்கின்றோம். தமிழகச் சூழலில் உடல்கூறு ஆய்வுகள் என்பன இன்று நமக்கு அறிமுகமான புதியதொரு ஆய்வுத்துறை அல்ல. மாறாகச் சித்த வைத்திய முறையில் எப்படி மூலிகைகளை ஆராய்ந்து நோய்களுக்குத் தீர்வைக்கண்டு பிடித்தனரோ அதே போல உடலைக் கூறு செய்து பாகங்களை ஆராய்ந்து சோதனை மேற்கொண்டிருந்தனர் நம் மூதாதையர் என்பதனை நாம் மறந்து விடலாகாது. இத்தகைய ஆய்வுகளைச் செய்தோரை நமது சமூகத்தில் சித்தர்கள் என அடையாளப்படுத்தினர். இவர்கள் ஆய்ந்தறியும் விஞ்ஞானிகள் எனக் காண்பதை விடுத்து புனிதத்துவத்தை ஏற்றி வைத்தமையால் இவர்களது ஆய்வுகளை பொது மக்கள் பெருவாரியாகக் கற்றுப் பலனடைய வாய்ப்பு கிட்டாமல் போனது ஒரு துரதிட்டமே.

### 4 வார வளர்ச்சியில் குழந்தை


ஆனால் ஐரோப்பாவிலோ உடற்கூறு ஆய்வில் ஈடுபட்டோர் அவற்றை அறிவியலாகவும் அழகியலாகவும் காணும் முயற்சியைப் புகுத்தியமை உடற்கூறுகளை அறிந்து கொள்ளும் துறையில் குறிப்பிடத்தக்க ஆர்வத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் வெற்றி கண்டு இதனை மருத்துவ அறிவியல் துறையாக வளர்த்துள்ளது.

மேற்கத்திய உலகில் உடற்கூறு ஆய்வுகள் எனக் குறிப்பிடும் போது நமக்கு நன்கறிந்த லியோனார்டோ டாவின்சியின் பங்களிப்புக்கள் மிகச் சிறப்பானவை. மருத்துவமனைகளுக்குச் சென்று அங்கு இறந்த மனிதர்களின் உடல்களைப் பெற்று, அவ்வுடல்களை கூறு செய்து, உடலின் பாகங்களைத் தனித்தனியாக எடுத்து அவற்றை ஓவியமாக வரைந்து குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான ஓவியங்களை இவர் உருவாக்கியுள்ளார். இவருக்கு அடுத்தார் போல மேலும் பலர் தொடர்ந்தனர் என்றாலும், டாவின்சி இத்தகைய மனித உடற்கூறு பற்றிய ஓவியங்களை வழங்கி அறிவியலைக் கலைப்படப்பாக்கியதில் முன்னோடியாகத் திகழ்கின்றார் என்று குறிப்பிட வேண்டியது மிக அவசியமாகும்.

இன்று மருத்துவ உலகம் துரித வளர்ச்சி கண்டுள்ளது. ஒவ்வொரு வினாடியும் ஏராளமான புதிய நோய்கள் உருவாகிக்கொண்டேயிருக்கின்ற அதே வேளையில் ஒவ்வொரு விநாடியும் உலகின் பல மூலைகளில் நோய்களுக்கான நிவாரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டு வருவதும் நிகழ்கின்றது.

## மேலழகும் உள்ளறிவும்





மென்மையான தோல் போர்த்திய மனித உடலின் மேல் அழகிய ஆடைகளும் அணிகலன்களும் போட்டு அழகு பார்க்கின்றோம். அந்த தோலுக்குக் கீழ் உள்ள பாகங்களையும் அவை செயற்படும் முறைகளையும் பொதுவாக நாம் எண்ணிப் பார்ப்பது கிடையாது.

தொடர்ச்சி 24ம் பக்கம்









25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# அர்யபட்டா சர்வதேச விருது பெற்றார் கலாசூரி திவ்யா சுஜேன்




இந்தியாவில் பெங்களுரில் அமைந்துள்ள ஆர்யபட்டா கலாச்சர நிறுவனம் (The Aryabhatta Cultural organization ( established in 1975) ஆண்டு முதல் மருத்துவம் பொறியியல் இசை நடனம் திரைப்படம் கல்வி இவற்றுக்கான சர்வதேச விருதுகளை வழங்கி வருகின்றது. இவ்வருடம் இலங்கை அபிநயஷேத்திரா அதிபர் திவ்யா சுஜேன் அவர்களுக்கு வழங்கி கௌரவித்துள்ளது.
இவர் இலங்கையில் அதி உயர் விருதான கலாசூரி விருதையும் தமிழகம் பத்மஸ்ரீ பத்மா சுப்பிரமணியம் அவர்களது உயர் விருதுகளையும் பெற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பாரதியின் தமிழ் மேல் தீராத காதல் கொண்டவள். அக்காதலை வெற்றிமணியில் நின்னைச் சரணடைந்தேன் என்னும் தொடர் மூலம் வெளிப்படுத்தி வருபவர்.
வெற்றிமணியின் நல்வாழ்த்துகளும், சிவத்தமிழின் நல்லாசிகளும் கிடைக்கட்டும். இவ்விருதினை - என்னகத்தாடும் சிவன் தந்த மற்றுமோர் அழகிய பரிசை குருவடியில் சமர்ப்பிப்பதுடன், ஆத்மதாகம் கலையென்று அறிந்து கரம் தந்த வெண்ணுள்ளங்கள் அத்தனை பேர்க்கும் என் ஆரத்தழுவிய அன்புகள் !! என்கிறார் கலாசூரி திவ்யா சுஜேன்.

03 பக்கத் தொடர்ச்சி **முள்ளிவாய்க்கால**

ஆக, முள்ளிவாய்க்கால் அவலத்துக்கு ஏதோ ஒரு வகையில் சர்வதேசமும் பொறுப்பு. அந்த வகையில், இதற்கான பரிகார நீதியைப் பெற்றுக்கொடுப்பதிலும் அதிகளவு பங்களிப்பை சர்வதேசம் வழங்க வேண்டும். ஐ.நா.வில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள், அல்லது அங்கு வெளியிடப்படும் அறிக்கைகள் மட்டும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுத்து விடப்போவதில்லை. மார்ச் மாத ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வில், "இலங்கையில் பொறுப்புக் கூறலை ஏற்படுத்த உதவும் வகையில் உலகளாவிய விசாரணை அதிகாரத்தை பிரயோகிப்பது உட்பட ஏனைய வழிவகைகளையும் உறுப்பு நாடுகள் ஆராயவேண்டும்" ஆணையாளர் பரிந்துரைத்திருந்தார். இது முக்கியமான ஒரு திருப்புமுனை. ஆனால், இது வெறுமனே அறிக்கை என்பதற்கு அப்பால் செயலுருப் பெறுமா என்பதுதான் தமிழ் மக்களின் கேள்வி.

"மகாவம்ச சிந்தனையில் திளைத்திருக்கும் சிங்கள அரசியல்வாதிகள் முள்ளிவாய்க்கால் அழிப்பை தமிழ் - சிங்களப் போராகவே கருதி தம் இனத்தின் வெற்றி என்ற மனோபாவத்தில்த்தான் இருந்து வருகின்றார்கள். ஒரு சிங்களப் போர் வீரன் தமிழ் மக்களுக்கு எதிராக எந்தக் குற்றத்தைப் புரிந்திருந்தாலும் அது குற்றமே அல்ல என்று வாதாடும் சிங்கள அரசியல் தலைமைகளே இன்று இந்த நாட்டில் காணப்படுகின்றார்கள்" என்பதையும் முதல மைச்சர்" தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இதற்கு மறுநாள் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி,"போரின்போது படையினர் எவரும் போர்க் குற்றங்கள் எதனையும் செய்யவில்லை. ஐ.நா. கூட அவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக் கவில்லை" எனக் குறிப்பிட்டிருக்கின்றார். முதலமைச்சர் விக்கினேஸ்வரன் சொன்னது எந்தளவுக்கு யதார்த் தமானது என்பதை ஜனாதிபதியின் உரை பிரதிபலித்தது. இலங்கைத் தீவு இரண்டுபட்ட நிலையல்தான் இருக்கின்றது என்பதை மட்டும் இந்த நிகழ்வுகள் பிரதி பலிக்கவில்லை. தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை என்பதையும் மைத்திரிபால சிறிசேனவின் உரை பிரதிபலிக்கின்றது.



25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

21 பக்கத் தொடர்ச்சி

**உடல் உலகம்** (Body Worlds) அருங்காட்சியகம், ஹைடெல்பெர்க்,




இந்த பொது நிலை இருப்பதால் நமது சிந்தனையில் மனித உடல் என்பது ஒரு புனிதப் பொருளாகவோ, அல்லது காமப் பொருளாகவோ மட்டுமே பார்க்கும் மனம் வாய்த்து விடுகின்றது. அந்தக் கோணத்திலிருந்து விடுபட்டு தோலுக்குக் கீழே மறைந்திருக்கும் தசைகள், உடல் உறுப்புகள், நரம்புகள், இரத்த நாளங்கள், எலும்புகள், எனக் காணத்தொடங்கும் போது நமக்குக் கிடைக்கும் பார்வை ஒரு மாற்றுப் பார்வையாகவே அமையும். இந்தப் பார்வையை வழங்கும் வகையில் உலகின் சில நாடுகளில் மனித உடலைக் கூறு செய்து பாடம் செய்து அவற்றை ஆய்வில் ஆர்வம் உள்ளோருக்குக் கண்காட்சியாக ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

ஜெர்மனி, நெதர்லாந்து, ஸ்பெயின், வட அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இத்தகைய உடற்கூறு கண்காட்சிக் கூடங்கள் அமைந்திருக்கின்றன. அத்தகைய ஒரு கண்காட்சிக் கூடம் தான் ஜெர்மனியின் ஹைடெல்பெர்க் நகரில் இருக்கும் "உடல் உலகம் (Body Worlds) அருங்காட்சியகம்".



"மகிழ்ச்சியளிக்கும் உடலின் பாகங்கள்" என்ற நோக்கத்தை மையமாகக் கொண்டு இந்த அருங்காட்சியகத்தை வடிவமைத்திருக்கின்றனர். இதனை வடிவமைத்தவர்கள் டாக்டர்.குந்தர் வோன் ஹாகென்ஸ் மற்றும் டாக்டர்.அஞெலினா வேலி ஆகிய இருவருமாகும்.
இந்த அருங்காட்சியகத்தில் 200க்கும் குறையாத மனித உடலின் பாகங்கள் முழுமை யாகவும் பகுதிகளாகவும் எனக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடத்தக்கனவாக, இங்குள்ள தாயின் கருப்பையில் வளர்ந்த 4 வாரம் தொடங்கி 8 வாரம் வரையிலான குழந்தைகளின் பாடம் செய்யப்பட்ட உடல்கள், கருகொண்ட தாயின் உடலில் குழந்தை முழுமையாக இருக்கும் வகையிலான ஒரு உடல், புகைபிடிப்பதனால் சேதப்பட்ட நுரையீரல், ரத்த நாளங்கள் பாயும் மனித முகம், தலை, மூளை, கால்கள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இங்குள்ள அனைத்து மாடல்களுமே மனிதர்களது உடலுறுப்புக்களேயாகும். இறப்பதற்கு முன்னர் தங்கள் உடலை மருத்துவ சோதனைக்காக அளித்த மனிதர்களின் உடல்களே இங்குப் பாடம் செய்யப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த அருங்காட்சியகத்திற்கு வருபவர்களுக்கு மனித உடலைப் பற்றி தெரிந்து கொள்ள ஏராளமான செய்திகள் இருக்கின்றன. உடல் உறுப்புக்களைக் கண்டு அஞ்சுவோரும், உடலை பாவப் பொருளாகவும் புனிதப் பொருளாகவும் நினைப்போரும் இந்த அருங்காட்சியகத்திற்கு வந்தால் உடலைப்பற்றி கொண்டிருக்கும் சிந்தனையில், தெளிவு தரும் வகையிலான அறிவியல் பூர்வமான தெளிவினை நிச்சயம் பெற முடியும்.
எத்தனையோ அதிசயங்களை நம் மனம் ஆசைப்பட்டுத் தேடி ஓடுகிறது. நாமே ஒரு அதிசயம் தான், நம் உடலும் ஒரு அதிசயம் தான், நம் உடலில் இயங்கும் உறுப்புக்களின் செயற்பாடுகளும் அதிசயம் தான் எனப் புரிந்து கொண்டால் பொய்யான அதிசயங்களில் நம் மனம் நாட்டம் கொள்ளாது.

போலித்தனத்தை துடைத்தொழிப்பதற்கும், மூட நம்பிக்கைகளை மனதிலிருந்து அகற்றுவதற்கும் அறிவியல் அறிவு ஒன்று தான் ஒரே வழி. அத்தகைய அறிவியல் பார்வையை வழங்கும் இந்த அருங்காட்சியகத்திற்கு ஜெர்மனிக்கு வருகை தருவோர் அனைவரும் வந்து பார்த்துச் செல்ல வேண்டும். இந்த அருங்காட்சியகத்தைப் பற்றிய முழு விபரங்களையும் https://bodyworlds.com/ என்ற வலைப்பக்கத்தில் பெறலாம்.



விநாயகா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து பாங்காக், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா
போன்ற பல நாடுகள் சென்று இம்முறை ஜேர்மன் வந்திருக்கும்
பிரபல பரம்பரை சோதிடர் சர்வதேச பிரபல்யம் வாய்ந்த

பண்டித் துர்க்கா பிரசாத்

குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், குழந்தை சந்தான பாக்கியம்,
பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம்
வாகனம், வீசாப் பிழச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், ஆரோக்கியம், பாக்கியம், வியாழ
முன்னேற்றம் செய்வினை கோளாறுகள், பேய், பிசாசுத் தொந்தரவுகள்,
கண்திருஸ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!

பேசும் மொழி - ஆங்கிலம், ஹிந்தி, ஜேர்மன் மற்றும் தமிழ்
பார்வை நேரம் - வாரத்தின் 7 நாட்களும்
காலை 08.00 மணி முதல் மாலை 09.00 மணி வரை

Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655

PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach

Fly2go.net




Flight Online Booking

At the Check-out, please choose the payment option
Book Now, Pay Later. Click confirm, we will send you
a reservation copy by e-mail.

நீங்கள் தெரிவு செய்து அனுப்பியதும்
உங்களுக்கு பதிவு செய்தமைக்கான
பிரதி அனுப்பப்படும்.
பணம் கட்டியதும் பயணச்சீட்டு
அனுப்பிவைக்கப்படும்

Book Now, Pay Later

Book your flight online
1. உங்களுக்கு ஏற்ற விமானத்தை தேடவும்
Search flight.
2. உங்களுக்கு ஏற்றதை தெரிவு செய்யவும்
Select your preferred flight.
3. பதிவுக்கான முழுவிபரங்களையும் தரவும்
Complete the booking details.

Plan your trip in seconds

உங்கள் பயணங்களை
சில விநாடிகளில் திட்டமிடலாம்!

Offnungszeiten.
montags bis Samstag
09:00- 21:00





Travel Air- Ackerstrasse 31 Tel: 0176 47 69 36 43
:40233 Düsseldorf Tel: 0211 38838699 Tel: 0202 2443104

Tel: 0202 725145 92
New Food City/ Aue 94 / 42103 Wuppertal


SINCE 2006
YUPPTV
NEW
SCOPE
புதிய வடிவில்
துரித வேகத்தில்...!
150+ TV Channels
5000+ Movies
€ 59/15 Months
( Extra € 20 for Set Top Box )
Watch 60+ Tamil TV Channels
+ Many More
Watch 5000+ Movies across 8 Languages
ஸ்கெட்ச்
வேலைக்காரன்
தீரன்
தெறி
பக்கா
Supports 25+ Devices
SAMSUNG
LG
tv
SONY
androidtv
300+ TV Channels
10 Days Catch-up TV
UK/Europe Time Shift
24/7 Customer Support
YouTube
Lebara play
YUPPTV
SMART TV
100% LEGAL
KERVEN GMBH
Rheinische Str. 64
44137 Dortmund
Tel: 023117721820 | 023133015738
Mob: 01738048459
E-Mail:info@kerven-gmbh.com
KERVEN
KERVEN Médias
191 Rue du Faubourg 75010 Paris
Tel : 09 77 19 59 1
Mob : 06 26 06 05 22
+33 754 11 20 20
E-Mail:info@kerven-gmbh.com

# அன்றாட வாழ்க்கையும் நிறவாததின் நிலைநாட்டமும்




## கறுப்பியும் சிவப்பியும் Fair and Lovely யும்


பெண்களின் மாதவிடாயை உச்சரிக்க முடியாத சூழ்நிலையால் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் 60 விகிதமான பெண்கள், ஒரு அழுக்குத்துணியை சுத்தத்திற்காக பாவனை செய்கின்றனர். அதே நாட்டில் பெண்களின் இனப்பெருக்க உறுப்பை வெண்மையாக்க ஒரு சவற்காரம் தேசிய தொலைக்காட்சியில் விளம்பரப்படுத்தப்படுகிறது. அதில் ஒரு பெண் தன் கணவனிடம் கறுப்புக் கோப்பியை கொண்டுசெல்ல,கணவர் அப்பெண்ணை கவனத்தில் எடுக்கவில்லை. அந்தச் சோகத்தில் இருக்கும் பெண், குறிப்பிட்ட சவற்காரத்தை பாவித்ததும், தன்னம்பிக்கை பெற்று, கணவரின் வண்டித்திறப்பை தனது உள்ளாடைக்குள் மறைக்க, அவர் இவரை கையில் தாங்கி படுக்கையறைக்கு கொண்டுசெல்கிறார். இதிலே ஆசிய நாடுகள், சுத்தம்,சுகாதாரம், உடல் நலம் போன்றவற்றை விட, மேற்கத்தேய அழகுரசத்திற்கு ஒதுக்கும் மதிப்பு தெரிகிறது.

இலங்கை இந்திய நாடுகளில் சிறார்கள் விழையாடும் பொம்மைகள் கூட வெள்ளையினத்து பொம்மைகளாக உள்ளன.
அவை இளம் வயதுகளிலேயே வெள்ளையர் உருவமே அழகின் தரத்தில் உயர்ந்ததென நிறுவும் வண்ணம், கீழைத்தேய பாடநூல்களில் அழகின் எதிர்ச்சொல்லை எடுத்துக்காட்ட, கறுப்பான பெண்ணை காண்பிக்கின்றனர்.

„அதிகம் வெய்யிலுக்குள் போகாதே!, என்ன இது, இப்படி கறுத்துவிட்டாய்? கோப்பி, தேனிர் குடிக்காதே, கறுத்து விடுவாய், பால் மட்டும் குடி, நல்ல வெள்ளையாக வருவாய்!“ என்று சிறு வயதில் இருந்தே வெள்ளையின் அதிகாரம் எம்மவர் வீடுகளில் நீடித்து வருகிறது. இதன்மூலம் நாம் வெண்மையல்லாதவர்களின் மதிப்பை குறைத்துக்கொள்கிறோம். இந்த வழக்கம் தமிழர் அரசியல் வரலாற்றில் இடம்பெற்ற அக்கிரமங்களின் சாட்சியாகும்.
வெள்ளையே அழகு என்னும் எண்ணம் எங்களுக்கு வந்ததின் காரணம் வெள்ளையர்கள் 17&18ம் நூற்றாண்டுகளில்
இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் குடியேற்ற ஆட்சியின் (Colonialism) போது எம்மவர் மேல் காட்டிய இனவெறி அராஜகங்கள்.

வெள்ளை மேனி கொண்டவர்களே பலம் வாய்ந்தவர்களாகவும் ஆட்சியில் உயர்ந்தவர்களாகவும் விளங்கினர். இவர்கள், தமக்குத்தாமே சூட்டிய பட்டத்தை வைத்து, நாம் எமது இன்றைய அழகின் தரத்தை அளந்துகொள்கிறோம்.

என் பெற்றோர் தலைமுறையுடன் பேச, அவர்கள் „மேற்கத்தேயர் மேனி வெண்மையாக இருப்பதால் எங்களை விட அழகு, நாம் அழ்கில் பின்தங்கியவர்கள்“. என்று தன்னம்பிக்கை இன்றி பேசுவார்கள். இது இவரகள் தனிப்பட்ட எண்ணம் அல்ல.



ராம் பரமானந்தன்

பல்லாயிரம் ஆண்டுகளாக எம்மவர் மேல் திணித்த ஒரு தாழ்வுமனப்பான்மையை நாம் தலைமுறைகளாக கொண்டுசெல்கிறோம். இந்தத் தாழ்வுமனப்பான்மையை மேலும் கூட்டிக்கொள்வதில் இந்திய பொழுதுபோக்கு ஊடகங்களும் பாரிய பங்கை வகிக்கின்றன. பிரபல நடிகை நந்திதா தாஸ் வெளிநாடுகளில் பல விருதுகளை பெற்றிருந்தாலும், இந்திய திரையுலகில் அவருக்கு அங்கீகாரம் குறைவாகவே உள்ளது. இவரது „மேனி வெண்மையாக இல்லாததும், இவரது உருவம் ஐரோப்பியர் போல இல்லாதுமே“ என சாடுகிறார்.
ஒப்பனையாளர்கள், இயக்குனர்கள், ஏனைய திரைப்படதொழிலார்கள் தாஸை வெற்றிகரமான பாத்திரங்களில் காட்டும் எண்ணத்துடன்: „பிரச்சனை இல்லை, மேக்கப்பாலும், எடிட்டிங் மூலமாகுவும் நிறத்தை வெண்மையாக மாற்றிக் கொள்ளலாம்!“ என இவரை இந்தியாவில் அவமதிப்பது வழக்கம்.
இந்தியாவின் மிக முக்கியாமான இயக்குனரான ஷங்கர், ஐ திரைப்படத்தை பற்றிக் கொடுத்த பேட்டியில்:
“உண்மையிலேயே மாடல் அழகி போல இருக்கும் ஒரு பெண்ணை நான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதால் Amy Jackson ஐ தெரிவுசெய்தேன்“ என்றார். இதன் அர்த்தும், தென் இந்தியப்பெண்களில் மாடல் அழகிகள் போல இருப்பவர்கள் யாரும் இல்லை என்பதே தமிழனான இவர் மறைமுகமாகக் கூறும் கருத்து.
Amy Jackson எனும் வெள்ளை இனத்து பெண் இன்று பல இந்திய திரைப்படங்களில் இந்தியப்பெண்ணாக நடித்து வருகிறார். இவர் இந்திய மக்களுக்கு இனியில்லை எனும் அழகின் உதாரணமாக விளங்குகிறார். சினிமா நடிகைகளை மாதிரியாகக் கொண்டுசெல்லும் காலகட்டத்தில் இவர் தவறான முன்னோடி ஆகிறார். இந்திய சினிமாவுக்கு நடந்த பாரிய குற்றம் Amy Jackson என்பது எனது கருத்து.

தொடர்ச்சி 27 ம் பக்கம்








அன்றாட வாழ்க்கையும்... 26 ம் பக்கத் தொடர்ச்சி....



Amy Jackson எனும் வெள்ளை இனத்து பெண் இன்று பல இந்திய திரைப்படங்களில் இந்தியப்பெண்ணாக நடித்து வருகிரார். இவர் இந்திய மக்களுக்கு இனியில்லை எனும் அழகின் உதாரணமாக விளங்குகிறார்.

சினிமா நடிகைகளை மாதிரியாகக் கொண்டுசெல்லும் காலகட்டத்தில் இவர் தவறான முன்னோடி ஆகிறார். இந்திய சினிமாவுக்கு நடந்த பாரிய குற்றம் Amy Jackson என்பது எனது கருத்து.

Unilever நிறுவனம் 1978 ஆம் ஆண்டு Fair and Lovely எனும் வெண்மை சேர்க்கும் Cream ஐ அறிமுகப்படுத்தியது. அன்றிலிருந்து அந்த Cream இந்தியாவின் அழகு சாதனப்பொருட்களிலேயே அதிகூடிய வாடிக்கை யாளர்களை கொண்டுள்ளது. தற்போது fair and Lovely யின் பொருளாதார மதிப்பு 500 Million ற்கு மேல் இருக்கிற்து. 2013ஆம் ஆண்டில் இந்தியர்கள் 233 தொன்களுக்கு மேல் Fair and Lovely யை வாங்கி, அதற்க்கு Coca Cola விற்கு செலவு செய்ததை விட அதிகம் செலவு செய்துள்ளனர் என்று The Guardian பத்திரிக்கையில் செய்தி. பிரபல நடிகர்கள் சாருக் கான், தீபிகா படுகோன் உற்பட, இத்தகைய Fairness Cream களை விளம்பரப்படுத்தி, Colourism எனப்படும் நிறவாதத்தை ஊக்குவிக்கின்றனர். இதனால் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், தற்கொலைகள், Acid தாக்குதல்கள் கூடிக்கொண்டே போகின்றன. Bollywood நடிகர் Abhay Dheol, நந்திதா தாஸ் ஆகியோர் பலருடன் இணைந்து, இனவாதத்திற்கு எதிராக விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் செய்து வருகின்றனர். ஐரோப்பிய அழகுத்தரங்களை, ஆசியாவில் கொண்டுவர முடியாததை ஏற்று, எமது சொந்த இயல்புகளை உபசரிக்க வேண்டுகின்றனர். அதைவிட இத்தகைய Cream களால் வரும் நோய்களையும் எடுத்துரைக்கின்றனர்.

இதனை ஏனைய கண்டங்களில் வாழும் ஆசிய இனத்தவர் நாமும் கருத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில் திப்பனிட்டா சர்மா, லக்ஷ்மீ மேனன் போன்ற மாடல் அழகிகள், கறுத்த மேனியைக்கொண்டும், உலகளாவிய ரீதியில் இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளில் சிறந்த அழகிகளாக விழங்குகின்றனர். அதைவிட Buzzfeed இணையத்தளத்திற்காக Andre Borges 1.07.2016 அன்று இந்தியாவில் மிக முக்கியமான தொழில்களில் இருக்கும் 14 வெள்ளைநிறம் அல்லாத இந்தியப்பெண்களை பேட்டி எடுத்து அழகிற்கும், வெற்றிக்கும் புதிய தரத்தை வகுத்தார். இப்படி Borges, வெற்றிக்கான காரணம் மேனியின் நிறம் அல்ல என நிறுவினார். அதை இலங்கைத் தமிழர்களான நாமும் ஏற்றுக்கொண்டு தவறான சமுதாயக் கூறுகளை கொண்டு செல்லவேண்டாம் என்பது எனது வேண்டுகோள்.

# புதுயுகப் பெண் மணி நவயுகா



அட்டைப்பட அழகி

நவயுகா புதுமைகளை உள்வாங்கத் துடிக்கும் துணிச்சல் மிக்க கலைஞர். கவிதை, கட்டுரை, நடிப்பு, என பன்முக ஆற்றல் படைத்தவர். ஈழத்து திரைப்படங்களில் நடித்துக்கொண்டு இருப்பவர். நெடுந்தீவு முகிலனின் தோட்டி குறும்படத்தில் சிறப்பான பாத்திரத்தில் தோன்றி மக்கள் மனதில் இடம் பிடித்தவர். வெற்றிமணி தயாரித்த பாடல் காட்சி ஒன்றில் 2012 ஆண்டு நடித்தவர்.

இலங்கையில் முதல் Mrs Srilanka for Mrs Universe போட்டியில் கலந்து கொண்டு எட்டாம் இடத்தை எட்டியவர். அப்போட்டியில் சிறந்த சிகை அலங்காரத்திற்கான Beautifull Hair titile முதல் பரிசை வென்றவர்.

இலங்கையில் அழகு போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற முதல் பெண்மணியுமாவர்.

அவரது கவியாற்றலுக்கு ஒரு கவிதை

ஓர் நதியின்
மிதவையைப் போல
இந்த இரவும் - உன்
இரட்டை விழிகளும்



படம்: வெற்றிமணி 2014









# உலக பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட தொடங்கி விட்டதா?



ரகு தர்மரட்டணம் ACMA , CGMA
email: ragu.savetax@gmail.com

உலகத்திலேயே மிகப்பெரிய பங்குச்சந்தையாக அமெரிக்காவில் இருக்கும் *S&P 500* என்ற index ஐ குறிப்பிடுவார்கள். இது அமெரிக்காவில் இருக்கும் மிகப் பெரிய 500 கபம்பனிகளை உள்ளடக்கி இருப்பதும். இதில் Apple, Amazon, Facebook, Bank of America, JP Morgan, Coco Cola, Mcdonalds, Walmart, Boeing போன்ற கம்பனிகள் அடங்கி இருக்கின்றன.


**2009ம் ஆண்டு முதல்.**

கடைசியாக நடைபெற்ற பங்குச் சந்தை வீழ்ச்சி என்பது 2007ம், 2008ம் ஆண்டில் இடம்பெற்ற credit crunch இற்கு பின்னர் 2009ம் ஆண்டு பங்குனி மாதம் 660 என்ற புள்ளிகளுடன் அதிக பாரியமான வீழ்ச்சியை அடைந்து இருந்தது. அதன் பின்னர் படிப்படியாக கடந்த 9 ஆண்டுகளாக எந்தப் பெரிய வீழ்ச்சியையும் அடையாமல் படிப்படியாக உயர்வு அடைந்து கொண்டே சென்று இருப்பதை கீழே இருக்கும் வரைபடம் மூலம் காணக் கூடியதாக இருக்கும்.

**2018 மாசி வரை.**

2009ம் ஆண்டு பங்குனி மாதம் மிகக் குறைவான *Gslspahd* 660 ஆக இருந்த S&P 500, மாசி 2018ல் 2880ஆக அதிகூடிய புள்ளிகளை அடைந்து பின்னர் கடந்து மூன்று மாதங்களாக சற்று சரிவு அடைந்து வருகின்றது. இந்த சரிவு என்பது மிகப் பெரிய சரிவிற்கான ஆரம்பமாக இருக்கலாமா என பலர் கருத்துக்களை தெரிவிற்கான ஆரம்பமாக இருக்கலாமா என பலர் கருத்துக்களை தெரிவிற்கின்றார்கள்.

கீழே இருக்கும் வரை படத்தில் பின் புள்ளிகள்: S&P 500 index விலைகளைக் குறிக்கின்றது. இதில் வரையப்பட்டிருக்கும் நீல நிறமான கோடு trend line எனக் குறிப்பிடப் படுகின்றது. அதாவது, இந்தக் கோடானது 2009ம் ஆண்டில் இருந்த குறைவான புள்ளியில் இருந்து மேல் நோக்கி கீறப் பட்டுள்ளது. S&P500 Index இன் விலை என்பது இந்த நீலநிறக் கோட்டிற்கு கீழே போகாத சந்தர்பத்தில் இதன் விலை இன்னமும் மேலே உயர்ந்து செல்லும் வாய்ப்புக்கள் இருக்கும் என்றும், நீல நிறத்துக்கு கீழே அதாவது 2500 புள்ளிகளுக்கு கீழே போனால் இந்தச் சரிவு மிகப் பெரிய சரிவிற்கு ஆரம்பம் என்றும் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.




பங்குச் சந்தையில் விலை ஏற்றத் தாழ்வுகளை fundamental method, technical method என்ற இரு முறைகளை உபயோகித்து கணித்துக் கொள்ள முடியும். Fundamental mthod என்பது தங்கள் பலருக்கும் தெரிந்த கம்பனி turnover, profit, interest rate, inflation என்ற அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகளை கவனித்துக் கொள்வது. Technical method என்பது வரைபடங்களை மற்றும் உபயோகித்து அதாவது Trendline, moving average, support line என்பனவற்றின் அடிப்படையில் எதிர்கால விலைகளை நிர்ணயப்பது. அமெரிக்கா கடந்த இரண்டு வருடகாலமாக வட்டி வீதத்தை அதிகரித்து வருவதும், மற்றும் ஆனி மாதத்தில் இன்னும் ஒரு 0.25வீதம் வட்டி வீத அதிகரிப்பை ஏற்படுத்தக் கூடும் என்பதும் பங்குச் சந்தை வீழ்ச்சிகளுக்கு ஒரு காரணமாக இருக்கலாம். Seasonal Factors என்ற அடிப்படையில் வைகாசி மாதம் முதல் ஆவணி மாதம் வரை கடந்த பல வருட கால வரலாரைப் பார்த்தால் பங்குச் சந்தையில் இந்த 3 மாத கால இடைவெளியில் வீழ்ச்சி ஏற்பட்டதே அதிக முறை என்பது குறிப்பிடத்தக்கது!.




மூன்றாவது தடவையாக கை புத்தக வடிவில் வெளிவரவுள்ளது

வியாபாரம் 2018




+ 44 7496 700 985


ஜெர்மனி 0699 675 8134
சுவிட்சர்லாந்து 044 508 7251
பிரான்ஸ் 017 061 5703
பிரித்தானியா 0207 060 2077

ஜெர்மனியில் கடந்த இரண்டு வருடங்களாக தமிழர் நிறுவனங்கள், கோயில்கள், கலைஞர்கள், வியாபார நிலையங்கள், என்பவற்றின் தகவல்களைத் தாங்கி வந்த எமது "வியாபாரம்" கோர்வையானது இம்முறை ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகளை உள்ளடக்கி "வியாபாரம் 2018" ஆக 23.06.2018 இல் வெளிவரவுள்ளது என்பதை எமது மக்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

"வியாபாரம் 2018" தகவல் தொகுப்பு கோவையினை நீங்கள் இலவசமாக 24.06.2018 ஆம் திகதியன்று ஹம் காமாட்சி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவன்றும் அதனைத்தொடர்ந்து வரும் நாட்களிலும் ஹம் காமாட்சி அம்பாள் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.மேலும், தொடர்ந்து வரும் நாட்களில் பிரசித்தி பெற்ற ஆலயங்களிலும் வியாபார தாபனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Tamildirectory.com admin@tamildirectory.com

உங்கள் திருநாளுக்கு தொலை தூரத்தில் நாங்கள் இல்லை! இன்றும் என்றும் உங்களோடு நாங்கள்!!!











**Tel:02305 - 85945 - 0176 608 108 13**

Thushiyanthan.
Thiruselvam

25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

Warendorf மாவட்டத்தில்
மாபெரும் அங்காடி

## M point Supermarkt

12th ANNIVERSARY

எமது பன்னிரண்டு ஆண்டு
நிறைவை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!

SALE

08.06.2018 - 09.06.2018

M-Point Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf )

2DAY SALE

உடனுக்கு உடன் இறக்குமதி செய்யப்பட்ட
மரக்கறிவகைகள் கடல் உணவு வகைகள்,
மற்றும் மளிகைப் பொருட்களுக்கும்
எம்மை நாடுங்கள்

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு
எங்கள் உள்ளம் கனிந்த நன்றி

e.mail: mpointsupermarkt@yahoo.de






Tel: 02583 30 30 300 0179 48 555 54



வியாபாரம் பெருக விளம்பரம் செய்க
வெற்றிமணி
0163 199 2333
vettimaniy@hotmail.com





## ஹனுமான் ஜோதிட நிலையம்

இந்தியாவில் புகழ் பெற்ற ஜோதிடர்.
உங்களது எந்தப் பிரச்சினைகளுக்கும் 6 தினங்களுக்குள் தீர்வு

### பண்டித் சாய் கணேஷ்

முகம் பார்த்து. நிழல்ப்படம் பார்த்து உங்கள் எதிர்காலத்தைக் கணிப்பார்
அத்தோடு கை ரேகையும் பார்க்கப்படும்

வியாபாரங்கள் — எதிரிகள் — உடல்நிலை — வேலை
குழந்தைப்பாக்கியம் — திருமணம் — பணம் — காதல்
விவாகரத்து — வழக்குகள் — கண்திருஷ்டி
குடும்ப ஒற்றுமை — படிப்பு — வாகனப் பொருத்தம்
மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு குருஜியிடம்
தீர்வு காணலாம்..!

மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு,
பீடைபிசாசு, பில்லி சூனியம்
என என்ன இருந்தாலும்
நிவாரணம் செய்து கொடுக்கப்படும்!




பேசும் மொழிகள் — ஆங்கிலம், ஹிந்தி மற்றும் தமிழ்

எனது சாதனைகளை யாராலும் தகர்க்க முடியாது
உங்களது எந்தப் பிரச்சினைகளுக்கும் என்னிடம் தீர்வுண்டு

+4915219223852 || +4915124470033
Rheineshe Str. , 44137 Dortmund - Germany



Cinematic Storytelling




## KIRI VIDEO

Professional Filming
&
Production Service

FOLLOW US ON facebook

KIRI VIDEO

Mob.: 01786709612
01777076958
Home: 02171 948036





## செல்லம்மா
Party Service

28 வருடங்களுக்கு மேலாக சமையல் கலையில்
அனுபவம் பெற்ற குமாரன் Ennepetal தரும்
சுவைமிகு உணவுகள்

பிறந்தநாள் திருமண விருந்துபசாரம்,
மற்றும் அனைத்து வைபவங்களுக்குமான
சைவ மற்றும் அசைவ உணவுகள் யாவும் சுடச்சுட
பரிமாறுவோம்



Mobil: 0151 71799900 And 0151 29 770077
தொடர்புகளுக்கு:
குமாரன் (என்னப்பெற்றால்)




தொகுப்பு: ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்

**யூச்சின் ஸ்ரீ நவசக்திவிநாயகர் ஆலயம்**
கொடி 26.05.2018 Hoch Str 10b 02164 7020 944
தேர் 03.06.2018 41363 Jüchen

**சுட்காட் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்**
கொடி 02.06.2018 Lehmfeld Str 18 0711 67 393 522
தேர் 10.06.2018 70374 Suuttgart.

**ஹம் ஸ்ரீ காமாட்சிஅம்பாள் ஆலயம்**
கொடி 11.06.2018 Siegenbeck Str 04-05 02388 302 223
தேர் 24.06.2018 59071 Hamm.

**டோட்முண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
கொடி 16.06.2018 Kiefer Str 24 0231 72 51 51 65
தேர் 24.06.2018 44225 Dortmund.

**பிறாங்போட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்**
கொடி 17.06.2018 Adelbert Str 61-63 069 979 45 618
தேர் 30.06.2018 60486 Frankfurt/M

**ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம்**
Sri Varacitti Vinayakar Temple- Gottwald Str 23-45525 Hattinger.
Tell: 023 24 270 61
**கொடி 02.06.2018– தேர் 10.06.2018**

**கொமஸ்பாக் ஸ்ரீ குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
கொடி 23.06.2018. Industrie Str 7 02261 913 133
தேர் 01.07.2018 51643 Gummersbach.

**கிறீவில்ட் ஸ்ரீ நாகபூசணிஅம்பாள் ஆலயம்**
கொடி 23.06.2018 Girmesgath 95 02151 565 00 45
தேர் 01.07.2018 47803 Krefeld.

**ஆடி மாதமும் அதன் பின்னருமான**
**தேர்த் திருவிழா காலம் ஆடி மாத இதழில் வெளிவரும்.**

**வெற்றிமணி விழா**
16.06.2018
வெற்றிமணி வழங்கும்
குறும்படம் குறுக்குத் தெரு வடபழனி
கதை.வசனம்: சேவியர்
இசை: சஞ்ஜே சிவா
பாடல்: பென்சிகா டன்
இயக்கம்: சஜித் பகீரதன்
மண்டபம் 16.00
Dorfgemeinschafts House
Provinzial str.01
Hückelhoven,Dovern,
Kreis Heinsberg,



**திருமதி கருணாவதி . பாஸ்கரன்**
**அவர்களை வாழ்த்துகிறோம்.**

28.04.2018 அன்று பிரான்சில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் இணைந்து நடாத்திய தமிழ்மாணி பட்டயக்கல்வி பட்டமளிப்பு விழாவில் பட்டத்தை பெற்றுக்கொண்ட எமது தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றத்தின் செயலாளரும், மன்றம் நடாத்தும் றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை ஆசிரியருமான திருமதி கருணாவதி (பாமா) பாஸ்கரன் அவர்களை இதயம் நிறைந்து வாழ்த்துகின்றோம். அத்துடன் நெதர்லாந்தில் பட்டம் பெற்ற அனைத்து ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்
அன்புடன் வாழ்த்துவோர் :- தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்ற நிர்வாகத்தினரும், றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களும்.



# நாட்டிலுள்ள விஷத்தையெல்லாம் நான் குடிக்க வைத்துவிட்டான்!

**- கண்ணதாசன் வரிகள் -**

ஜூன் 24 அன்று கண்ணதாசன் நினைவுநாள். உலகத் தமிழர்களின் வாயில் முணுமுணுக்கும் காதல், தத்துவம், தாலாட்டுப் பாடல்களின் கவித்துவத்தால் மனித மனங்களை அடிமைப்படுத்தியவர். அதுமட்டுமல்ல பல மனித மனங்களின் சோகத்திற்கும், மகிழ்ச்சிக்கும், . நித்திரைக்கும் தேடும் வரிகளுக்குச் சொந்தக்காரன். பழைய தமிழ் இலக்கியங்களின் கற்பனைகளையும் அழகு தமிழ் சொற்களையும் கலந்து தன் கற்பனை என்னும் தேனூற்றி அற்புதமான பாடல்களை யாத்தளித்து, சேரமான் காதலி என்னும் நாவலுக்காக சாகித்திய அகடமி விருது பெற்ற எழுத்தாளர்.

இவரது குடும்பம் பெரிது. 3 திருமணம். 15 வாரிசுகள். பிறந்தது ஓரிடம் வளர்ந்தது ஓரிடம். காரைக்குடியைச் சேர்ந்த பழனியப்பச் செட்டியார், இவரை வளர்ப்பதற்காக இவருடைய தாய்தந்தைக்கு 7000 ரூபாய் பணம் கொடுத்து வாங்கினார். ஆரம்பப் பெயர் முத்தையா என்றும், அதன் பின் வளர்ப்புத் தந்தையிட்ட பெயர் நாராயணன் என்றும் மாற்றப்பட்டது. இன்று கண்ணதாசன் என்னும் பெயர் உலகறிந்த பெயராக நின்று நிலைக்கின்றது. திரையுலகின் மறக்கவொண்ணாத நாயகனாய் திரைக்கதை வசனம், பாடல்கள் எழுதியது மட்டுமல்ல நடிகனாகவும் விளங்கியிருக்கின்றார். இவர் பராசக்தி, கறுப்புப்பணம், சூரியகாந்தி, இரத்தத்திலகம் ஆகிய படங்களில் நடித்திருக்கின்றார்.




16 வயதில் வீட்டைவிட்டு வெளியேறி சென்னைக்கு வந்தார். பல இன்னல்களையும் சோகங்களையும் சுமந்தார். திருமகள் பத்திரிகையில் புருப் திருத்துனராக வேலைகேட்டு வந்து பத்திரிகை ஆசிரியராக அமர்த்தப்பட்டார். பின் திரைஒலி, சண்டமாருதம், தென்றல் திரை ஆகிய பத்திரிகையில் பணியாற்றினார். அனைத்துப் பத்திரிகைகளிலும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் எழுதியதனால், இவரது இலக்கிய ஆளுமையை உலகம் அறிந்து கொண்டது. அதன் பின் தான் திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதத் தொடங்கினார்.

காப்பியங்கள், கவிதை நூல்கள், சிற்றிலக்கியங்கள், கவிதை நாடகங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், புதினங்கள்,சிறுகதைகள், வாழ்க்கைச் சரித்திரங்கள், கட்டுரைகள், சமயநூல்கள், நாடகங்கள், உரைநூல்கள் போன்ற வடிவங்களில் தமிழ் இலக்கிய உலகில் வலம் வந்துள்ளார். சுமார் 5000 க்கும் அதிகமான பாடல்களை திரைப்படங்களுக்கு எழுதியுள்ளார்.



ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941



## கண்ணதாசனின் அனுபவ மொழிகள்

தேவைக்கு மேலே பொருளும்,
திறமைக்கு மேலே புகழும்
கிடைத்துவிட்டால்
பார்வயில் படுவதெல்லாம்
சாதாரணமாகத்தான் தோன்றும்!

**கௌசி**

கன்னியின் காதல் என்ற திரைப்படத்திற்கு எழுதிய "கலங்காதிரு மனமே உன் கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே" என்னும் பாடலே இவர் திரைப்படத்துறைக்குள் பிரவேசித்த முதல் அறிமுகப் பாடல். அடுத்தடுத்து முயன்றால் பலன் கிடைக்கும் என்னும் தத்துவப்பாடலாக இது அமைந்திருந்தது. மூன்றாம்பிறையில் வந்த "கண்ணே கலைமானே" என்னும் உறங்கச் செய்யும் பாடலே இவரது இறுதிப் பாடலாக அமைந்தது. அவர் உறங்க அவர் பாடிய பாடலாயும் அமைந்திருந்தது. இடையில் வந்த பாடல்களுக்கும் கவிதைகளுக்கும் நான் சக்தியைப் பெற்றதே கம்பராமாயணப் பாடல்கள் தான் என்று தன் வாயாலேயே கூறியிருக்கின்றார். "காலமெனும் ஆழியிலும், காற்று மழை ஊழியிலும் சாகாது கம்பனவன் பாட்டு. அவன் தலைமுறைக்கு எழுதி வைத்த சீட்டு" என்று கம்பருக்கு அவர் பாடிய பாடல்கள் கண்ணதாசனுக்கும் பொருந்துவதாக இருக்கின்றது.

பாடல்களால் பணம் குவிந்த பணத்தை திரைப்படம் தயாரித்து அழித்தார். சேமிப்புப் பழக்கமில்லாத கண்ணதாசன் "பிர்லாவைப் போல சம்பாதித்தேன். ஊதாரியைப் போல செலவழித்தேன். பல நேரங்களில் பிச்சைக்காரன் போல ஏங்கி நின்ற வாழ்க்கைதான் எனக்கு வாய்த்திருக்கின்றது என்று தனது கட்டுரை ஒன்றில் எழுதியிருக்கின்றார். சந்தர்ப்பத்திற்கேற்ப பாடல்கள் எழுதுவதில் திறமையானவர். பணக் கஸ்டத்தில் சகோரர்கள் உதவி செய்ய மறுத்த போது "அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே" என்னும் பாடலை எழுதினார். விஸ்வநாதன் அவர்கள் நெஞ்சிலோர் ஆலயம் படத்திற்காகப் பாடல் எழுத வரும்படி கண்ணதாசனை அழைத்துக் காத்திருந்த போது அவர் வரவில்லை என்ற காரணத்தால், கோபப்பட்ட விஸ்வநாதன் அவர்கள் "இனிமேல் கண்ணதாசனிடம் பாடல்கள் கேட்கப் போவதில்லை" என்று கூறியதை அறிந்த கண்ணதாசன் "சொன்னது நீதானா சொல் சொல் என்னுயிரே" என்னும் பாடலை எழுதிக் கொண்டு போய்க் கொடுத்தார்.

மனவாசம், வனவாசம், எனது வசந்த காலங்கள், எனது சுயசரிதம் என்னும் ஆகிய 4 புத்தகங்களும் ஒருவன் எவ்வாறு வாழக்கூடாது என்பதற்காக தன் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டிய புத்தகங்களாகும். அவர் தன்னுடைய பல பாடல் வரிகளில் தன் வாழ்க்கையையே படம் பிடித்துக் காட்டியுள்ளார். "ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு. ஒரு கோலமயில் என் துணையிருப்பு" இறப்பதற்கு முன்பே தனக்குத்தானே எழுதிய இரங்கற்பாவில் "ஏற்றிய செந்தீயே நீ எரிவதிலும் அவன் பாட்டை எழுந்து பாடு" என்று இறுதி வரிகளை எழுதியுள்ளார்.

இவர் கற்பனையில் வரைந்த பாடல்களுக்குச் சில எடுத்துக்காட்டுக்கள்

காதல் பாடல்

"பாலோடு பழம் யாவும் உனக்காக வேண்டும்
பாவை, உன் முகம் பார்த்துப் பசியாற வேண்டும்
மனதாலும் நினைவாலும் தாயாக வேண்டும் - நானாக வேண்டும்
மடிமீதில் விளையாடும் சேயாக வேண்டும் நீயாக வேண்டும்"

தொடர்ச்சி 31 ம் பக்கம்

Milin Impex GmbH
எமது விலைகளை அறிய
எமது இணையத்தளத்தை
பார்வையிடவும்
Web :www.milinimpex.de

எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

# சுவிஸில் "இது காலம்" திரைப்படம்




சுவிட்சர்லாந்து தமிழ் மூவி மேக்கர் நிறுவனத்தின் திரு.குணபதி கந்தசாமி அவர்களின் தயாரிப்பு இயக்கத்தில் உருவான "இது காலம்"எனும் திரைப்படம் இலங்கையின் பதினாறு திரைகளில் காட்சிப்படுத் தப்பட்டு மக்களின் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

புலம்பெயர் தேசத்துப் படைப்பு தாயகத்தில் பெற்ற வரவேற்பானது, திரைத்துறைசார் புலம்பெயர் கலைஞர் களுக்கு புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

வாடைக்காற்றுத் திரைப்படத்தில் நடித்த திரு.குணபதி கந்தசாமி அல்லது பாபாஜி என்கின்ற அன்றைய இளைஞர்தான் இன்று இது காலம் எனும் திரைப்படத்தைத் தயாரித்து இயக்கி நடித்துள்ளார்.

டனேஷ்,நவநிதா,நாயகன், நாயகியாக,நடித்த, இத்திரைப் படத்தில் அனுஷா பாலசுந்தரம்,தமிழ், மைக்கேல்,டாக்டர் சுஜீவன், சுவிஸ் ரகு,கதிரவன் ரவி,லவீன், வாணி சிவநேசன், சித்ரா ஞானா,ராஜன் தாமிநாதர்,விநாயகம், சண்முகம்,ஏவிளம். பாலா,ராஜாகிங்,உட்பட மற்றும் பலரும் நடித்துள்ளனர்.

இத்திரைப்படம் நிரோஜனின் இணை இயக்கத்திலும், டென்மார்க் சண்ணின் மூலக்கதை யிலும் ரவி அச்சுதனின் ஒளிப்பதிவிலும், ரவிபிரியனின் பாடல் இசையிலும், பாமினி, செல்வ முகுந்தனின் பாடல்வரிகளிலும் இலங்கை மக்களையும், தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங் களையும் கவர்ந்த "இது காலம்" எனும் திரைப்படம் விரைவில் சுவிஸ், நோர்வே, உட்பட உலகின் பல நாடுகளிலும் வெளியிடப் படவுள்ளது.

**கல்லாறு சதீஷ்-**

## திருமணத்திற்கு முன் அப்படி இப்படி! இப்போ இப்படி அல்லவா இருக்கவேண்டும் !




திமிர் பிடித்தவர் என்று பெயர் வாங்கிய அஜித் இன்று அடக்கமானவர், அன்பானவர் என்று அழைக்கப்படுகிறார். கோலிவுட்டில் அஜித் பெயரை சொன்னாலே அவரா! என்ன மனுஷன் தெரியுமா. அவ்வளவு அன்பானவர், அடக்க மானவர் என்பார்கள். ஆனால் 20 ஆண்டு களுக்கு முன்பு இதே அஜித்தை தலைக்கனம் பிடித்தவர், திமிர் பிடித்தவர் என்று திட்டினார்கள். அஜித் பேட்டி கொடுத்தாலே பலரும் முகம் சுளித்தார்கள்.

அஜித் மனதில் பட்டத்தை பளிச்சென்று பேசிவிடுவார். அப்படி பேசுவதால் அவரை ஒரு காலத்தில் திமிர் பிடித்தவர் என்றார்கள்.

முன்பு எல்லாம் அவர் பேட்டி கொடுத்தாலே அனல் பறக்கும். அதன் பிறகு அவர் ஊடகங்களில் இருந்து ஒதுங்கி இருக்கிறார். மேடை அரசியலில் இருந்து தள்ளியே இருப்பவர் அஜித். தன்னை கட்டாயப்படுத்தி அழைத்து வந்தார்கள் என்று தமிழக முதல்வர் கலந்து கொண்ட விழா மேடையில் துணிச்சலாக கூறியவர் அஜித். அதை கேட்டு அங்கிருந்தவர்கள் எல்லாம் ஆடிப் போக ரஜினியோ தில்லாக எழுந்து நின்று கை தட்டினார்.

அன்பு கோபக்காரராக இருந்த அஜித் அப்படியே ஆளே மாறிவிட்டார். தனது பெயரை ரசிகர்கள் தவறாக பயன்படுத்தியதை அறிந்த அவர் எந்த நடிகரும் செய்யத் தயங்கும் விஷயத்தை செய்தார். அதாவது ரசிகர் மன்றங்களை கலைத்துவிட்டார். அதன் பிறகு அவர் திரையுலகில் அவ்வளவு தான் என்று பலரும் கூறினார்கள். ஆனால் தொடர்ந்து பாக்ஸ் ஆபீஸ் கிங்காகத் தான் உள்ளார். படம் படம் சினிமாவை பொழுதுபோக்காக மட்டும் பாருங்கள். குடும்பம் தான் முக்கியம் என்று ரசிகர்களுக்கு அறிவுரை வழங்கியவர் அஜித். என்னை அப்புறம் கொண்டாடலாம் முதலில் குடும்பத்தை கொண்டாடுங்க என்று கூறிய அவரை ரசிகர்கள் இன்றும் கொண்டாடிக் கொண்டு தான் உள்ளனர். ரசிகர் மன்றங்கள் இல்லாவிட்டாலும் அவருக்கு இருக்கும் ரசிகர்களுக்கு குறைவு இல்லை. உதவும் குணம் அஜித் படப்பிடிப்பு தளத்தில் சக நடிகர்கள் மட்டும் அல்ல தொழில்நுட்பக்கலைஞர் முதல் அனைவரையும் சமமாக நடத்துபவர், மதிப்பவர். உதவி என்று கேட்டு வந்தால் வெறும் கையுடன் அனுப்பி வைக்காதவர். தான் செய்யும் உதவியை வெளியே சொல்லக் கூடாது என்று அன்புக்கட்டளை போடுபவர். இவையாவும் அரசியலைக் குறிவைக்காத சிறப்பான மாண்பு.

## நாட்டில் உள்ள விஷத்தை எல்லாம்..... 30ம் பக்கத் தொடர்ச்சி




**சகோதரபாசம்**

மலர்ந்தும் மலராத பாதி மலர்
போல வளரும் விழி வண்ணமே
வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலையன்னமே
நதியில் விளையாடி கொடியின் தலை சீவி நடந்த
இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர்
கண்டு பொலிந்த தமிழ் மன்றமே

**தாலாட்டுப்பாடல்**

காலமிது காலமிது கண்ணுறங்கு மகளே
காலமிதை தவற விட்டால் தூக்கமில்லை மகளே
எண்ணிரண்டு வயது வந்தால் கண்ணுறக்கம் இல்லையடி
ஈரேழு மொழிகளுடன் போராடச் சொல்லுவதே தீராத தொல்லையடி"

**சோகப்பாடல்**

"உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என் கண்ணில் பாவையன்றோ கண்ணம்மா என் உன்னதன்றோ"

வானிலுள்ள தேவர்களை வாழ வைக்க விஷம் குடித்தான்
நாட்டிலுள்ள விஷத்தையெல்லாம் நான் குடிக்க விட்டுவிட்டான்"

**தத்துவப்பாடல்**

"ஆசை கோபம் களவு கொள்பவன் பேசத் தெரிந்த மிருகம்
அன்பு நன்றி கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம்"

"படித்ததினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு
பாடம் படிக்காத மேதைகளும் பாரினுள் உண்டு"

"வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எது என்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை"

இவ்வாறு காலத்தால் அழியாத பல திரையிசைப் பாடல்களைத் தந்த கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மறைந்தும் மறையாது பல உள்ளங்களில் மறக்க முடியாது இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்.




ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt

24.06.2018 ஞாயிற்றுக்கிழமை
Hamm காமாட்சி அம்மன்
தேர்த் திருவிழா வளாகத்தில்
எங்கள் அதிரடி மலிவு விற்பனை!
சிறப்பு விலையில்

தரமும் மலிவும் நிரந்தரம்!

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Mönchengladbach
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

TEMPO
VALUTRANS
Ria
MoneyGram

துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven





25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்


உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
இந்தியா- இலங்கை- விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
ஆசிய, ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா. கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


Photography
Video Filming
Album Making
Graphic Desiging
Your Dreams Comes True
AKR Visualizers
BOOK A SESSION NOW AT
professional photography & cinematography
0049 231 5897 7140
0049 162 803 1647
Rheinische Str. 56
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com


SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


StaR - Impex
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Rabeena
இலங்கையில் தயாரிக்கப்பட்ட
Rabeena தயாரிப்புக்களின்
யேர்மனிக்கான ஏக விநியோகஸ்த்தர்
Kipper Str.3 44147 Dortmund Germany